கதம்பமாலை

OFFICE OF THE ... 28 JUL 1938 MADRAS

கதம்ப மாலை

894 · 8113

அநுபவக் களஞ்சியம் — ஆனந்த வெள்ளம்
இன்ப மணிகள் — ஈடிலாக் கனிகள்
உத்தமப் போக்குகள் — ஊன்றிய சொற்கள்
எளிய நடை — ஏனையோர்க்கும் விருந்து
ஐயமகற்றும் — ஒப்பற்ற நீதிகள்
ஓதற்கரிய — ஔதாரிய குணங்கள்

இவையனைத்தும்
ஒருங்கே அமையப்பெற்ற
உயரிய கதைகளடங்கிய
இனிய புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்

“ஜகன்மோகினி” ஆபீஸ்,
26, தேரடி வீதி,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபி ரைட்] 2-ம் பதிப்பு [அணா 12.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

அட்டவணை

			பக்கம்
1.	பொங்கல் பரிசு	....	1
2.	ராதா கிருஷ்ணன்	....	12
3.	படாடோப பரமேச்வரன்	....	22
4.	சுட்டு விடுவேன்	....	40
5.	வைரமாலை	....	54
6.	வெட்கத்தின் விபரீதம்	....	64
7.	கனவு	....	76
8.	வாய்ப்பறை	....	86
9.	ஜோஸ்யம்	....	97
10.	அற்பப் புளுகு, ஆயுள் பஞ்சம்	....	107
11.	சந்தேகப் பேய்	....	114
12.	சந்திப் பிச்சை தாயே!	....	126
13.	அழகற்ற பெண்	....	137

ஸ்ரீ

கதம்ப மாலை

1

பொங்கல் பரிசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

"நாதா! இந்தக் கதர் சேலையைப் பார்த்தது முதல் என் மனம், என்னரிய சினேகிதை பிரேமாமணியின் மீது தாவுகின்றது. அவளுடைய அழகிற்கும், மேனி பளபளப்பிற்கும் இந்தச் சேலை வெகு அழகாக இருக்கும். இதை வாங்கி, தீபாவளிக்குப் பரிசாக அனுப்பலாமா?" என்று ஓர் யுவதி, தன் நாயகனைக் கேட்டாள்.

மாசிலாமணி, இதைக் கேட்டு மிகவும் சந்தோஷித்து, "கண்மணீ லலிதா! உன் பிரியப்படியே செய். இன்றே இதை வாங்கி பார்ஸலில் அனுப்பினால், தீபாவளிக்குள் போய்ச் சேர்ந்து

வினா:—இரவல் விழுங்கிகள் சில நாளாக உன் வீட்டிற்கு வருவதில்லையே. என்?

விடை:—இங்குள்ள புத்தகங்கள் எல்லாம் படித்தாயிற்று. இனி புதிதாக ஏதேனும் வெளியாகுமென்ற செய்தி தெரிந்ததும் வருவார்கள்; இப்போது இங்கு வேலை இல்லை.

விடும். விலை தீர்த்து எடுத்துக்கொள்!" என்றான். உடனே அழகிய பச்சை நிறமுள்ள அந்தக் கதர் சேலையை விலை முடித்து வாங்கி எடுத்துக்கொண்டு தம்பதிகள் வீட்டுக்கு வந்தார்கள்.

அன்று பகலிலேயே அந்தச் சேலையைத் தபால் மூலம் பார்ஸலில் அனுப்பியதோடு, லலிதா தனியே ஒரு கடிதமும் பின் வருமாறு எழுதினாள்.

"அன்பு மிக்க பிரேமாமணி!

உனக்குச் சகலவிதமான மங்களமும் உண்டாவதாக. இந்த வருடம் நம் பாரத நாட்டின் நிலைமையைக் கருதி, லக்ஷக்கணக்கான மக்கள் நம்முடைய தாய் நாட்டுக் கதரையே தீபாவளிக்கு வாங்குகின்றார்கள். உனக்குக் கதரிடத்தில் அபிமான மின்மையினால் நீ அதை வாங்க மாட்டாய் என்றறிந்து, நான் வாங்கி தீபாவளிப் பரிசாக அனுப்பி இருக்கிறேன். என்னுடைய சினேகத்தைக் கருதி நீ இச்சேலையை அந்தப் புனிதமான தீபாவளியன்று கட்டிக்கொண்டு கடவுளை வணங்க வேண்டுகிறேன். உலகம் போற்றும் உத்தமரான காந்தி மகான் நாட்டின் நன்மையை விரும்பி நயந்துபதேசித்த கதரை வெறுக்காது விருப்புடன் கட்டிக் கோள்வாய் என்று நான் நம்புகின்றேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
லலிதா."

அக்கடிதத்தை உறையிலிட்டு அனுப்பிவிட்டாள். கடிதமும் பார்சலும் பிரேமாமணியினிடம் சென்றன. கடிதத்தை முதலில்

வினா :—உத்தமனாக விருக்க வேண்டும் அவனே கடவுளால் மெச்சப் படுபவன் என்கிறார்களே! அவன் எப்படி இருக்க வேண்டும்?

விடை :—தன்னுடைய கடமைகளை எல்லாம் உதைத்துத் தள்ள வேண்டும். தாய் தந்தையின் வயிற்றிலடிக்க வேண்டும். உடன் பிறப்பின் வயிறெரியச் செய்ய வேண்டும். மனைவியின் மண்டையை உடைக்க வேண்டும். குழந்தைகளையும் குப்புறத் தள்ளி மிதிக்க வேண்டும். சினே

வாங்கிப் படித்தவுடனே பிரேமாவுக்கு வெகு கோபம் வந்து விட்டது. "ஆஹா! இவளா என் உண்மைச் சிநேகிதை! என் புருஷன் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் என்பதை அறிந்தும் இவள் எங்கள் பிழைப்பில் மண்ணைப் போடுவதற்காக இந்தக் கதர் புடவையை—எனக்குப் பிடிக்காத இந்தக் கோணியை—அனுப்பி இருக்கிறாள். சீச்சீ! இந்தச் சேலை எனக்கு வேண்டாம்; இப் பார்சலை நான் திருப்பி விடுகிறேன்" என்று சற்றும் யோசனை யின்றிப் பார்சலை வேண்டாமென்று திருப்பிவிட்டு, அன்றைய தபாலிலேயே அவளுக்கு ஒரு கடிதமும் எழுதிவிட்டாள்.

பார்சலை அனுப்பிய லலிதா, "பிரேமா விடமிருந்து பதில் ஏதேனும் வரும்" என்று எதிர்பார்த்துக்கொண் டிருக்கையில், ஒரு கவர் வந்தது. லலிதா வெகு ஆவலோடு அதைப் பிரித்துக் கடிதத்தைப் படிக்கலானாள்.

"அன்புள்ள லலிதா!

உன்னுடைய சிநேகிதத்திற்கு நான் பாத்திரமாகி மெச்சத் தக்கவளே யன்றி, இந்தக் கோணிபோன்ற நாகரிகமற்ற கதர்ப் புடவைக்கு நான் இணங்கிய வளல்ல. உன்னுடைய அன்பை நீ இந்தக் கோணியின் மூலமாகக் காட்டாமலிருந்தால், நான் இன்னும் மகிழ்ந் திருப்பேன். என்னுடைய நிலைமையை அறிந்தும் நீ இத்தகைய பரிசு அனுப்பியது எனக்கு மிக்க வருத்த மாக இருக்கிறது. நான் அதை ஏற்றுக் கொள்ளப் பிரியப்படவில்லை. நான் கதரைக் கையாலும் தொட மாட்டேன். ஆகையால் உனக்கே திருப்பி அனுப்பி விட்டேன். அந்தச் சேலையை நீயே கட்டி மகிழ்வாய்.

கிதர்களை மோசம் செய்ய வேண்டும். பந்துக்களைப் பார்த்தவிடத்தில் உதைக்க வேண்டும். வேசி வீடே கதி என்று வாழ வேண்டும். அத்தகை யோரைத்தான் கடவுள் நினைவுடன் ஒவ்வொரு செய்கையையும் புத்தகத் தில் பதிவு செய்து கொண்டு, நரக லோகத்திற்கு அனுப்பச் சிபார்சு செய் வார். மற்றவர்களைப்பற்றிக் கடவுள் இவ்வளவு சிரத்தை எடுக்காமல் தன்னடியிலேயே சேர்த்துக்கொண்டு விடுவார்.

நான் திருப்பி யனுப்பிவிட்டதற்காக நீ வருத்தப்பட லாம். ஆனால் அது உன் குற்றமேதான்.

இங்ஙனம்,
உன் பிரியமுள்ள,
பிரேமாமணி."

அக் கடிதத்தைப் படித்ததும் லலிதா உண்மையில் கண்ணீர் உதிர்த்தாள். "ஹா! பேதாய்! உன் மனப்போக்கு இன்னும் வலுத்து விட்டதா! நீ இச் சேலையைத் திருப்பியனுப்பியதற்கு நான் சற்றும் வருந்தவில்லை. எத்தகைய கல் மனத்தையும் கரையச் செய்வதற்கு ஒரு காலத்தைக் கடவுள் அளிக்கமாட்டாரா! அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்" என்று தனக்குள்தான் நினைத்து, அக்கடிதத்தைத் தன் பர்த்தாவுக்குக் காட்டினாள்.

"கண்ணே! இதுவும் ஒரு நன்மைக்குத்தான் என்று எண்ணிக்கொள். நம் நாட்டினுள்ள மக்கள் தேசத்தின் நிலைமையை உணராது எக்காலமும் இப்படியே கண்மூடித்தனமாக இருந்து விட முடியாது. ஒரு வீடு பற்றி எரிகையில், மற்ற வீட்டார், "அவ்வீடுதானே எரிகிறது, நமக்கென்ன?" என்று பேசாமலிருந்தால், அந்தத் தீயானது அவ்வீட்டோடு நின்றுவிடாது. ஒவ்வொரு வீடாகப் பற்றி எரித்துக்கொண்டுதான் வரும் என்பதை எல்லோரும் அறியவேண்டும். அதுபோலவே தேசத்தில் வந்துள்ள கஷ்டம் எல்லோரையுந்தான் பாதிக்கும் என்பது நாம் கண் கண்ட அனுபவமில்லையா? இதை நம் நாட்டு மக்கள் என்று அறிகின்றார்களோ, அன்றுதான் பாரதத் தாயின் விடுதலையான சுதினமாகும்" என்றான். பிறகு, லலிதா அந்தக் கடிதத்திற்குக் கண்ணாடி போட்டு, படம்போல மாட்டிவிட்டாள். பார்சலையும் பெற்று அதை அப்படியே பெட்டியில் வைத்தாள். பிரேமாவுக்கு பதிலே எழுதவில்லை.

தம்மையறியாதவாறு ஒருவர் மேல் காதல் பதிந்து விட்டவர்கள் அதை மறக்கும்பொருட்டு, ஒருவரையொருவர் பிரிந்திருப்பது ஓர் மருந்தாம். அதற்கும் குணமாகாவிடின் அடியோடு இருவரும் சந்திக்காமல் துவேஷிகள் போலாய்விடுவது நலமாம்.

பிரேமாவின் புருஷனுக்கு அடிக்கடி வெளியூருக்குச் செல்லக் கூடிய வேலையாதலால், சில சமயத்தில் தனித்தும், சில சமயத்தில் மனைவியுடனும் செல்வது வழக்கம். ஒரு தினம் ஒரு ஊருக்குச் சென்று மறுநாளே திரும்பி வந்துவிடவேண்டும் என்று தீர் மானித்துக்கொண்டு தம்பதிகள் இருவரும் சென்றார்கள். அந்த ஊரில் எதிர்பாராதபடி பெரிய மழை ஆரம்பித்துவிட்டதால், இவர்கள் நல்ல மழையில் அகப்பட்டுக்கொண்டார்கள். பஸ்ஸி லிருந்து சுமார் அரை மைல் தூரம் இவர்கள் செல்லவேண்டிய இடம் இருந்ததால், அதற்குள் இவ்விருவரும் முற்றும் நனைந்து தெப்பலாக ஆகிவிட்டார்கள். குளிர் நடுக்குகின்றது. என்ன செய்வார்கள் பாவம்! அவ்வூரோ சாதாரண சிறிய கிராமம்.

பிரேமாவும் அவள் புருஷனான வாஸுதேவனும் தங்கு வதற்கும் இடமின்றித் தவித்தவாறு தட்டித் தடுமாறி ஒரு வீட்டில் தங்கினார்கள். அப்போது கையில் ஒரு துணியும் கொண்டு வராமல் வந்ததனால், கடைக்குச் சென்றுதான் புதிது வாங்கவேணுமென்று தீர்மானித்து, ஊரில் கடை எங்கிருக்கிறதென்று விசாரித்தார்கள்.

கடை இருக்குமிடத்தை அறிந்து சென்று பார்க்கையில், அவ்வூரில் அன்னிய நாட்டு ஜவுளிக் கடை மருந்திற்கும் கிடை யாது. கிராமவாசிகள் சேர்ந்து, கதர் உற்பத்தி செய்து, ஒரே ஒரு கதர் கடையை மாத்திரம் வைத்திருப்பதாக அறிந்தார்கள். அப்பொழுது என்ன செய்வது? வேறு வழி இல்லாமையினால், அதையே வாங்குவதற்கு இசைந்து தங்களுக்கு வேண்டிய சேலை, வேஷ்டி முதலியன வாங்கினார்கள்.

சேலையின் அழகான புஷ்பக் கரையைப் பார்த்ததும் பிரேமா வின் மனத்திற்கு அது மிகவும் பிடித்தமாயிருந்தது. உடனே அதன் விலையை விசாரித்தாள். 6 ரூபாய் என்றார்கள். பிரேமா, 'அந்தை 20 ரூபாய் சொல்லுவான்' என்று நினைத்ததற்கு மாறாக

உறவு கொண்டாடவரும் பிசினாரிகள் சிலருக்குத் தாம் செல்லும் விசேஷத்திற்கு ஒரு ரூபாய் மரியாதைக்குக் கொடுப்பதற்கும் மனமில்லை. அப்போது விலகு முகம். அன்னியர்கள் ஏழையாயினும் சக்திக்கு மீறி மரியாதைக்காகச் செய்கிறார்கள்.

6 ரூபாய் என்றதும், அவ்வளவு குறைந்த விலையைக் கேட்டதும் அவளுடைய மனத்தில் ஒருவிதமான—அவளை யறியாத—உணர்ச்சி உண்டாகியது. உடனே அச்சேலையை எடுத்துக் கொண்டு, மற்ற உடைகளையும் வாங்கிக் கொண்டனர். பிறகு, அவர்கள் அவற்றைக் உடுத்திக் கொண்டார்கள்.

பிரேமாவுக்கு அந்தக் கதர் சற்று கனமாகத்தான் தோன்றியது. எனினும் அந்த அழகிய புஷ்பக் கரையின் மீதுள்ள மோகத்தினாலும், வேறு விதி இன்மையினால் அதைக் கட்டிக் கொண்டதில் ஒருவாறு திருப்தி யடைந்தாள். அங்கு நடக்க வேண்டிய வேலை முடிந்ததும் அவர்கள் தம் வீடுவந்து சேர்ந்தார்கள்.

பிறகு, அந்தக் கதர்சேலையைக் கட்டிக்கொள்ள மிகப் பயந்து வெளியிலேயே எடுக்காது பெட்டியில் வைத்து விட்டாள். எனினும் இராக்காலத்தில் அதைக் கட்டிக் கொள்வாள். பிரேமாவின் மனத்தில் கதர் பிரேமை யற்றிருக்கையில், இந்தப் புஷ்பக்கரை சிறிது பிரமிப்பைக் கொடுத்ததால், அதுமுதல் கதர் கட்டியிருப்பவர்களை எல்லாம் கவனிக்க வாரம்பித்தாள். தேசபக்தியில் மிக்க பாசமுள்ள மங்கையர்கள் வித விதமான புஷ்பக் கரைகளும் மத்தியில் புஷ்பங்கள், நக்ஷத்திரங்கள் முதலியனவும் போட்டுள்ள சேலைகளைக் கட்டிக் கொண்டுள்ளத்தைக் காணக் காண அந்தச் சேலைகளிடத்தில் இவளுக்கும் பிரேமை வளரத் தொடங்கியது. இவ்விதமே சில காலமாயிற்று.

அவர்கள் வழக்கம்போல் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. சாமான்களையும் துணிமணிகளையும் ஒரே மூட்டையாகக் கட்டி, அதை பஸ்ஸின் மேலேயே போட்டுவிட்டு அவர்கள் பஸ்ஸில் அமர்ந்தார்கள். குறித்த ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும், பஸ்ஸின் மேலே போட்டிருந்த மூட்டையைப் பார்த்தபோது, அது காணவில்லை. அவர்கள் திடுக்கிட்டார்கள்.

பண்டிகை கொண்டாட மாப்பிள்ளையை அழைத்தாய்விட்டது. வீட்டிலே சாமான் ஒன்றுமில்லை. சொந்தக்காரர்களோ பெட்டியை அழுத்தமாகப் பூட்டிவிட்டுத் தைரியமாகவிருக்கிறார்கள். மாப்பிள்ளையோ! காப்பி, பலகாரம் வருகிறதென்று ஆந்தைபோல விழித்துக் கொண்டிருக்கிறார்.

மூட்டை எப்படி திடீரென்று காணுது போயிருக்கும் என்று எல்லோருக்கும் சந்தேகமாகி விட்டது. உடனே அந்த வழியில் திரும்பி வந்து பார்த்தும் அகப்படவில்லை. யாரோ களவாடிக் கொண்டுபோய் விட்டதை யறிந்து வருந்தியவாறு சென்ருர்கள். பிரேமாவின் மனம் அவளை யறியாது மாறுதலை யடையத் தொடங்கியது. மறுநாள் காலையில் குளித்துக் கட்டிக் கொள்ள ஒன்றுமில்லாமையினுல், என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டே அவர்கள் கடைக்குச் சென்ருர்கள்.

அப்போது மாலை 5 மணி இருக்கும். கடைக்குப் போகும் வழியில் சில பெண்மணிகள் ஆரஞ்சு சேலையைக் கட்டிக் கொண்டு தேசிய பஜனை செய்து கொண்டு வந்தார்கள். அப்போது அவர்கள் பாடிய பாடல் வெகு இனிமையாயிருந்தமையினுல், பிரேமா சற்று நேரம் நின்று அதைக் கேட்கலானுள்.

"லலிதே சுபகலிதே" மெட்டு.

1. வருவீர் ஜெயம் பெறவே! பெறுவீர் நம் தேயக் கதர்
ஒருமிக்க மனமிசைந்து பொறுமைக் கடிமையாய் (வரு)

2. நம்நாட்டுப் பொருளதனை நம் நாட்டைவிட் டகலா
நம் நாட்டவர் செய்த நம் நாட்டுக் கதரணிய (வரு)

3. ஜாதிமத பேதமின்றி ஆதரிப்பீர் கதருடையை
போதிய துணைபுரியும் தீதற்ற கதரணிய (வரு)

4. சிக்கனத்திற்கேற்ற உடை திக்கெங்கிலும் போற்றும் உடை
மிக்கபுகழ் காந்தி சொன்ன பக்குவமாம் கதரணிய (வரு)

இதைக் கேட்டதும் பிரேமாவின் கண்களில் நீர்த்துளிகள் உதிர்ந்துவிட்டன. 'ஹா! தேசத்திற்காகப் பாடுபடும் இம்மாது சிரோமணிகள் பெருத்த செல்வவந்தர் வீட்டுப் பெண்களன்ருே!

பிறகு மூன்ருவது மனிதர்களின் பணத்தினுல் அடாடா! ஆமவடை, போளி, லட்டு, ஜிலேபி முதலிய பக்ஷணங்கள் எல்லோருடைய வயிற்றிலும் முழுசு முழுசாகப் புகுந்து கொள்கின்றன. பண்டிகை ஷோக்காக நடந்து விடுகின்றது. சரிகை வேஷ்டியுடன் மாப்பிள்ளையும் வீடு சேர்கிருன்.

இவர்களில் அனேகர் நாம் பார்த்தவர்களல்லவா !........சீச்சீ ! நாம் என்ன மூடப் பிழைப்புப் பிழைக்கின்றோம்........நம்மைத் திருத்திக் கதர் வாங்கச் செய்வதற்காகவே கடவுள் இவ்விரண்டு சம்பவங்களையும் உண்டாக்கி இருக்கிறார். இந்தத் தத்துவத்தை அறியாது நாம் இனியும் நமது நாட்டின் துணியை வாங்காம லிருப்பது வெட்கப்படவேண்டிய செய்கையாகும்' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள்.

இவ்விஷயங்களைத் தன் நாயகனிடம் எடுத்துரைத்தாள். இனி மேல் தாம் கதர்தான் வாங்க வேண்டுமென்று இருவரும் முடிவு செய்துகொண்டு, அந்தப் பஜனையில் பாடும் சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தித்துப் பின்னர் கதர் கடைக்குச் சென்று தங்களுக்கு வேண்டிய உடைகளை வாங்கிக்கொண்டார்கள். அப்போது லலிதா அனுப்பிய கதர்ப் புடவையின் நினைவு பிரேமாவின் மனதில் தோன்றியது. அவ்வாறு தோன்றியதும், "ஹா! நாம் இக் கதரின் மகிமையை அறியாது அலக்ஷியமாய் அன்பான சினே கிதையின் பரிசைத் திருப்பிவிட்டோமே!" என்ற உணர்ச்சியும், வருத்தமும் உடனே உண்டாயிற்று. தான் செய்தது தவறு என்றதை மனம் குத்திக் காட்டியது.

உடனே அந்தச் சேலைகளுடன் மற்றொன்று அழகியதாக எடுத்துக்கொண்டு சென்றாள். அங்கு சென்ற காரியம் முடிந்து திரும்பி வந்ததும் ஒரு கடிதம் எழுதி, அதைத் தபாலில் அனுப்பிய தோடு, அக் கதர் சேலையை உடனே லலிதாவிற்குப் பார்சல் செய்து அனுப்பிவிட்டாள்.

லலிதா சற்றும் எதிர்பாராத விதமாய் வந்த இந்தக் கடிதமும் பார்சலும் கண்டு இவை யாரிடமிருந்து வந்திருக்குமென்று எண்ணி அக்கடிதத்தைப் படிக்கலானாள்.

தன் வீட்டில் எண்ணெய் தேய்த்துக் கொள்கையில் பட்டதோ இல்லையோ என்று தலைக்கு மட்டும் தேய்ப்பது. பிறர் வீட்டில் தேய்க்கையில் கால் முதல் தலை வரையில் அபிஷேகம் செய்து மகிழ்வது. மறுதினம் தன் வீடு சென்று பார்க்கையில், தான் வைத்துவந்த எண்ணெய் முற்றும்

"எனது அன்பார்ந்த லலிதா !

என் குற்றத்தை மன்னிப்பாயாக! எனது அறிவற்ற செய்கைக்கு வருந்துகிறேன். கதரின் மகிமையையும் அதன் உண்மையான தத்துவத்தையும் நான் அறியும்படியான கிருபையைக் கடவுள் இப்போதே எனக்களித்தார். (மேற்கண்ட விஷயங்களைக் கூறி) நான் இப்போது அநேக கதர்ப் புடவைகள் வாங்கி விட்டேன். சென்ற சில தினங்களாக தினம் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கின்றேன். என் கண்கள் தினம் மழை பொழிகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் சிறைச்சாலை சென்றதையும், மகாத்மா லண்டன் மாநகரிலிருந்தும் திரும்பி வந்து, அவர் செய்த உபந்நியாசங்களையும் படித்துப் பரமானந்தத்தோடு, அபாரமான துக்கமும் அடைந்தேன்.

நீ என்னை மன்னித்து இதோடு அனுப்பியுள்ள கதர் புடவையை 1932-வது புது வருஷப் பரிசாக ஏற்று, அன்று அதைத் தரித்துக்கொண்டு, அவ்விஷயத்தை எனக்கு இரண்டாந் தேதி தபாலிலேயே தெரிவிக்க வேண்டுகிறேன். நீ அதை ஏற்றுக்கொண்டு என்னைக் கௌரவித்தாய் என்பதைக் கண்ட பிறகே என் மனம் நிம்மதியடையும்.

இங்ஙனம்
உண்மையுள்ள,
பிரேமா."

இதைப் படித்துப் பேரானந்த மடைந்த லலிதா அவளிஷ்டப் படியே அதை ஜனவரி முதல்தேதி யன்று உடுத்திக்கொண்டு, அன்றே ஒரு கடிதமும் அவளுக்கு எழுதிவிட்டாள்.

எலியால் கீழே உருட்டப்பட்டுத் தன் வஞ்சனை வீணாகாமல் கடவுள் காட்டிவிடுகிறார். அப்போதுதான் வயிறு எரிகிறது. அயல் வீட்டுச் சொத்தாயின்?....

பிரேமா இரண்டாந் தேதி யன்று தபால்காரன் வருகைக்குக் கூட காத்திருக்கமாட்டாது, தபாலாபீஸுக்குத் தன் பர்த்தாவை அனுப்பிக் கடிதம் வந்திருப்பதை வாங்கிவரச் செய்து படிக்க லானாள். அது பின் வருமாறு :—

"என் அன்பான பிரேமாமணீ!

சர்வ மங்களமும் உண்டாவதாக! ஈசன் இத்தகைய கதர் பக்தியை உனக்கு அளித்ததற்காக நான் மனமார்ந்த வந்தனத்தைக் கடவுளுக்குச் செலுத்துகிறேன். என்னுடைய அருமைச் சிநேகிதையாகிய உன்னை நான் கோபிக்கவில்லை. உன் போன்ற மற்ற மக்களுக்கும் கடவுள் சுதந்திர உணர்ச்சியை அளிக்க வேண்டுமென்றுதான் நான் இராப் பகல் கடவுளைப் போற்றிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். உனக்கு அவ்வுணர்ச்சி அளித்ததுபோல நம் நாட்டிலுள்ள சகல மானவர்களுக்கும் அத்தகைய உணர்ச்சியையும், சுதந்திர தாகத்தையும் கூடிய சீக்கிரத்தில் கொடுத்தருளி, அடுத்த 1933-வது வருஷப் பிறப்பிற்குள் பாரத மக்களின் பரிதாபம் நீங்கி, எல்லோரும் சந்தோஷமடைந்து, சுதந்திர தேவியின் மங்கள தரிசனத்தைக் கண்டு களிக்கச் செய்ய வேண்டுமென்று தினம் கோருகிறேன். நீயும் அவ்விதமே செய்வாய்.

பிரேமா! உன் விருப்பப்படியே நான் நீ மகிழ்ந்தளித்த கதரை உடுத்திக் கொண்டேன். நீ எனக்குத் திருப்பிவிட்ட தீபாவளியின் பார்ஸலை நான் பிரிக்காமலேயே இதுபரியந்தம் வைத்திருந்தேன். அதை இதோடு

வினா :—புராணம் படிக்கின்றவர் 'ஊ ஊ ஊ, ஆ ஆ ஆ' என்று இழுக்கின்றாரே! அதில்கூட அர்த்தம் உண்டா?

விடை :—அதில் அர்த்தமில்லை. ஆனால், பணம் இருக்கிறது. சங்கீதத் திறமையைக் கண்டு அதிகமாகக் கூட்டம் வரும். அதனால் பணமும் வரும்.

அனுப்பி இருக்கிறேன். இந்துக்களுக்குச் சிலாக்யமான பொங்கல் பண்டிகை யன்று அதை உடுத்திக் கொள்ள வேண்டுகிறேன். அடிக்கடி உன் க்ஷேமத்தைத் தெரி விக்க மறக்காதே.

இங்ஙனம்,
உன் அன்பு மிக்க,
லலிதா."

இந்தக் கடிதத்தைப் படித்த பிரேமா பூரித்துப் புளகாங்கித மடைந்தாள். அன்றுமுதல் 'பொங்கல் பண்டிகைக்குப் புதிய உடை வாங்கும் சகோதரிகள் யாவரும் கதர் உடையாகவே வாங் குங்கள்' என்று பிரசாரம் செய்யவும், தான் யாருடன் பேசிய போதிலும் கதர் உடையைக் கட்டும்படி வற்புறுத்தவும் வேண்டிக் கொள்ளவும் ஆரம்பித்துவிட்டாள்.

["சுதேசமித்திரன்"—2-1-1932]



ராஜமோஹன்

நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்த இரண்டாம் பதிப்பு தயாராகிவிட்டது. 'பணமா, குணமா? அந்தஸ்தா, அன்பா? தாயின் சேவையா அல்லது தன் சுக வாசமா?'...இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் அளிக் கும் அற்புதமான கதை. இப்போது டாக்கீயாக வெளி வந்து விட்டது.

விலை ரூபாய் 1—4. முதல் டாக்கீ நாவல்

2

ராதாகிருஷ்ணன்

அல்லது

இரட்டைச் சோதனை

"நாதா! தங்கள் முகம் என்றைக்கும் விட இன்று அதிக வாட்டத்தை யடைந்திருப்பதன் காரணம் யாது? நான் கேட்பதற்கு அஞ்சியே, இது பரியந்தம் என் மனத்தை அடக்கிக்கொண்டு வந்தேன். இன்று தங்களைப் பார்த்தால் என்னால் சகிக்கக்கூடவில்லை. என்ன காரணத்தினால் கண்ணில் ஜலம் வருகின்றது? நான் என் மனமறிய தப்பிதம் செய்ததாகத் தெரியவில்லையே! அப்படி என்னை யறியாது நான் ஏதேனும் பிழைகள் செய்திருப்பின் என்னை மன்னிக்கலாகாதா?" என்று கெஞ்சியவாறு, ஒரு எழில் மிக்க மடந்தை விசனமே உருக் கொண்ட முகத்தோடு படுத்திருந்த தன் புருஷனைக் கேட்டாள்.

அதற்கு அவ்வாலிபன் மிகுந்த வருத்தத்தோடு பேசத் தொடங்கி, "ராதா! நான் என் விசனத்தை என்னென்று கூறுவேன்? என் மனச் சாக்ஷியே என்னைத் தடுக்கின்றது. என் நாவே எனக்கு எழவில்லை. நான் செய்த பாபமும், துரோகமும் சாமான்யமாகக் கூறுந் தரமன்று. சண்டாளனின் முதன்மைப்

வினா :—மோட்டார் இருக்கையில் கிராமத்திற்கு ஏன் மாட்டு வண்டியில் சென்றாய்!

விடை :—நான் இரவல் மோட்டாரில் என் சாமர்த்தியத்தினால் சுற்றுகிறேன். கிராமத்திற்குக் கல்லிலும் முள்ளிலும் சென்று மோட்டார் உடைந்து விட்டால், யார் ஈடு கொடுப்பது?

பட்டம் எனக்கே தகும். உன்மீது ஒரு தப்பிதமும் இல்லை. குற்றத்திற்கெல்லாம் காரணமான சண்டாளன் நான்தான். கொலைக்கும் அஞ்சாத கொடிய பாதகன் நானே! என் விஷயங்களை எனது கபட இதயத்திற்குள்ளேயே வைத்துப் பூட்டி வந்தேன். இன்றே அவை அனைத்தையும் வெளியிடும் காலம் முற்பட்டது. எனது மானமழிந்து, மரியாதை குலைந்து, கண்ணிய மிழக்கும் வரையில் என் பாபச் செயல் என்னைவிட்டு அகலவில்லை. என் வாயினுல்—மகா கொடிய பாதகனின் வாயினுல்—உன்னை அன்பான மொழியினுல் அழைத்து இன்புற்று நினைக்கக் கனவிலும் அறியேன்” என்முன்.

ராதா :—இதெல்லாம் என்ன புதிதாக வார்த்தையாடுகிறீர்கள்? நீங்கள் என்னை வெறும் வெட்டிப் பேச்சில் கொஞ்சி அழைத்தல் தான் எனக்கு மகிமையாகும். தாங்கள் என் மனம் நொந்து வார்த்தை ஆடுகிறீர்கள்? காரணம் என்ன? தாங்களா பாவி? இதென்ன எனக்கு ஒன்றும் புரியவில்லையே?

கிருஷ்ணன் :—சண்மணீ! உண்மையில் நான் பாதகனே. எப்படியெனில், நான் தேகத்திலுள்ள இரத்தத் திமிரினுலும், துர்நேசர்களின் சகவாசத்தினுலும், என்னை அறிந்து பல தீமைகளும், அறியாமல் பல அநியாயங்களும் செய்துவிட்டேன். என் செய்கைகளின் பலன் எனக்கு இதோ கிடைத்திருக்கிறது பார். இதைப் பார்த்த பிறகே எனக்குப் புத்தி வந்தது; கண்ணும் தெரிந்தது” என்று கூறி, ஒரு கடிதத்தைக் காட்டினுன்.

அதை வாங்கிய ராதா, நன்ருகப் படிக்கத் தெரிந்த பெண்மணியாகையினுல், அதைப் படித்துப் பார்த்தாள். அக்கடிதம் பணங் கொடாமையினுல் வந்துள்ள இறுதிக் கடிதமாகத் தெரிந்து கொண்டாள். உடனே அவள் மனம் திடுக்கிட்டது; முகம் சடக்

வினு :—கண்ணே! இன்று பள்ளிக்கூடத்தில் எப்படி கேள்விகளுக்குப் பதிலளித்தாய்?

விடை :—“குடித்தனம் என்ருல் என்ன?” என்கிற கேள்வி வந்தது. கள், சாராயம், விஸ்கி, பிராந்தி முதலிய லாகிரி வஸ்துக்களைக் குடிப்பதற்குக் குடித்தனம் என்று வெகு நேர்த்தியாய் எழுதி விட்டேன்.

கென்று விசனத்தினால் மாறுபட்டது. அப்போது அவள் முகத்தைப் பார்த்தால், மேகத்திடை மறைபட்ட மதியம்போல மங்கி விட்டது தெரிந்திருக்கும். அவளை அறியாமலேயே கண்கள் நீரைக் கக்கவாரம்பித்தன. தனது மாறுதல்களை அடக்கிக்கொண்டு தன் பர்த்தாவின் மோவாயைப்பிடித்தவாறு, "நாதா! இதற்காகவா விசனிக்கின்றீர்கள். இது ஒரு பிரமாதமா! எனக்கு இந்த விஷயம் சற்று முன்பே தெரிந்திருந்தால், என் தகப்பனாருக்குத் தந்தி கொடுத்திருப்பேன். இப்போது மணி 8 அடிக்கப் போகிறதாகையினால், இனி நாளைக் காலையில் தான் தந்தி கொடுக்க முடியும். என்னுடைய தேகத்திலிருக்கும் சகலமான பூஷணங்களை ஒன்று கூட்டினாலும் 200 ரூபாய்க்கும் தாளாது. இதில் கண்டுள்ள தொகையோ இதைப்போல் இன்னும் ஒன்றரைப் பங்கு வேண்டியிருக்கிறது. நாதா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தாங்கள் இச் சமயம் எதிர்த்துப் பதில் கூறலாகாது. இந்த நகைகளை இப்போதே கொண்டு எப்படியாவது விற்றுப் பணமாக்கி விடவேண்டும். தாங்கள் எழுந்து செல்வதற்குச் சரிப்படாவிடில் நானே சென்று வருகிறேன். நமது வேலைக்கார முத்தம்மாள் இருக்கிறாள். அவளை அழைத்துக்கொண்டு போகிறேன். மன்னியுங்கள்" என்று கூறிக்கொண்டே அவனுடைய பதிலையும் எதிர்பாராது சென்று, தனது மாங்கல்யமும், காலாழியும், சாதா மூக்குத்தியும் தவிர மற்ற சகலமான ஆபரணங்களையும் கழற்றினாள். அவற்றை எல்லாம் எடுத்துக்கொண்டு நேரே தனக்குத் தெரிந்த ஜவுளிக் கடைக்குச் சென்றாள். கடை மூடப்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். இனித் தனக்கு எவ்விதம் பணம் கிடைக்கும். ஆ! கடவுளே! இந்த இராக் காலத்தில் ஆகாயத்

வினா :—பக்கத்து வீட்டுப் பெண்ணைப் பார்த்து அவளைப்போலத் தானும் புதிய புதிய நகைகளை அணிய வேண்டுமென்று தொந்தரவு செய்கிறாள் என் மனைவி. என்ன செய்வது?

விடை :—கில்ட்டு நகைகளை நிறையச் செய்து பத்து தினம் அணிய வைத்து ஆசை தீர்ந்ததும் அவைகளை நீயே எடுத்து ஒளித்து வைத்து விட்டுக் களவு போனதாகக் கூறி, நகை யாசையறும்படியாகப் பெரிய உபதேசம் செய்து தேற்றிவிடு. பிறகு எல்லாம் சரியாகிவிடும்.

திலுள்ள எண்ணரிய நக்ஷத்திரங்களைத் தவிர வேறு யாரும் துணையாக இல்லையே! இந்த எட்டு மணி சுமாருக்குள் மழையின் பயனாக எல்லோரும் தம் தம் இல்லத்தின் உள்ளே அடங்கி விட்டார்களே! எனக்கு யார் மூலம் உதவி செய்ய எண்ணி யுள்ளாய் என்னப்பனே!'' என்று மனங் கலங்கியவாறு கிழவியான முத்தம்மாளுடன் மீண்டும் திரும்பி வீடு வந்து சேர்ந்தாள்.

அவளுடைய இருதயத்தில் சொல்லவறியாத வேதனை யுண்டாகிப் பதைக்கின்றது; சற்று யோசித்தாள். அந்தக் கடிதத்தில் கண்ட மனிதனின் விலாசம் எங்கே என்று பார்த்து முத்தம்மாளின் உதவியினால் அதை அறிந்துகொண்டு, தைரியத்துடன் அவ் வீட்டிற்குச் சென்று அந்த மனிதனது மனைவியின் இரு தாள்களிலும் விழுந்து வணங்கி, "அம்மணீ என் தாயே! தற்போது நீங்கள்தான் என் தயார்; நீங்கள்தான் என் குல தெய்வம். இதோ இக் கடிதத்தை உங்கள் பர்த்தா என் பர்த்தாவுக்கு அனுப்பி யுள்ளார். நாங்களோ திடீரென்று பொருள் சேகரிக்கக்கூடிய சக்தியை உடையவர்களல்ல. என் பர்த்தா இக் கடிதத்தைக் கண்டு இடிந்து போய் விட்டார். அவர் நிலைமையைப் பார்த்தால் எனக்குப் பயமாயிருக்கிறது. எனக்கு மாங்கல்ய பிச்சையை நீங்கள்தான் தரவேண்டும். இதோ இந்த நகைகளை ஒரு மதிப் பிட்டு வைத்துக் கொண்டு, என் பர்த்தாவையும் என்னையும் மன்னித்து இன்னும் ஒரு வாரத் தவணை கொடுங்கள். அதற்குள் எப்பாடு பட்டேனும் மீதித் தொகையை உங்களுக்குச் சேர்ப்பித்து விடுகிறேன். மன மிரங்க வேண்டும்" என்று வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டாள்.

இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்ட அந்த அம்மாள் பெரிதும் விசனத்தை யடைந்து, ராதாவினுடைய விசனகரமான முகத்தைக் கண்டு சகியாதவளாய், "அம்மா! உன் முகத்தைக்

வினா:—முன்போல அவன் என்னிடத்தில் முகமகிழ்ச்சியாகப் பேசுவதில்லை. ஏனோ, தானோ என்கிறான் என்ன காரணமிருக்கும்?

விடை:—நீ செய்த படுமோசங்களை எல்லாம் தெரிந்து கொண்டான். அதனாலேயே உஷாராக விருக்கிறான்.

கானை என் வயிறு பற்றி எரிகின்றது. உன்னைப்போன்ற இத்தனை வயதான பெண்ணை நான் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கிறேன். அத்தகைய எனக்கு உன் முகமே பெரும் ஆறுதலை யளிக்கின்றது. உன் பர்த்தாவுக்கும் என் பர்த்தாவுக்கும் பத்து வரவுள்ள செய்தியே எனக்குத் தெரியாது. அப்படியிருப்பினும் நான் உன் பொருட்டாக என் பர்த்தா விடத்தில் வந்து சிபார்சு செய்கிறேன்" என்று கூறி, ராதாவையும் அழைத்துக் கொண்டு, தன் பர்த்தா இருக்கும் இடத்திற்குச் சென்று, ராதாவினுடைய வருகையையும், அவள் தெரிவித்த வரலாற்றையும் சொன்னாள்.

இதைக் கேட்ட புருஷன் ஆற்றொணுச் சீற்றத்தை அடைந்து, "கடன்காரனுக்காக நீ பரிந்துகொண்டு வருகிறாயா? நேற்று, இன்று என்று அவன், பல நாட்களை ஓட்டிக்கொண்டே வந்தான்; அதைச் சகிக்காமல்தான் நான் இவ்விதம் அனுப்பினேன். என் கடிதப் படிக்குச் சேரவேண்டிய பணத்தை உடனே கொடுத்துத் தான் தீரவேண்டும்; இந்த வீண் வார்த்தைகளை என்னிடம் கூற வேண்டாம்" என்று கடிந்து பேசினார்.

ராதா:—ஐயா! என் தந்தைக்கு ஒப்பாகிய நீங்கள் என்மீது இரக்கங்கொண்டு இந்நகைகளை முதலில் வைத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு வாரத்திற்குள் உங்கள் முழுத் தொகையும் சேர்த்து விட்டு, மறுகாரியம் பார்க்கிறேன். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள், அதுபோல இச்சமயம் நீர் இரங்கவேண்டும்.— என்று வேண்டினாள். அவரோ, "கடன்காரன் விஷயத்தில் காருண்யம் காட்டி ஏமாந்ததுபோதும், இனி இவ்வீண் வார்த்தை வேண்டாம். என்னுடன் வாதம் செய்யாமல் போகலாம். இந்தச் சொத்தை நான் ஸ்வீகரித்தாலும் மற்ற தொகைக்கு உடனே

வினா:—பி. ஆர். நாத்தம் என்று இவர் பெயராமே! அதென்ன பெயர், அர்த்த மென்ன?

விடை:—இது தெரியாதா! பி. ரங்கநாதம் என்பதன் சுருக்குப் பெயர் பி. ஆர். நாத்தம் என்பது. அந்த அழகிய சுருக்குப் பெயரின் அர்த்தத்திற்கு ஏற்ப, அவர் அருகில் வருகையிலேயே சாராய நாத்தம் வீசுகிறது.

ஜவாப் சொல்லித்தான் தீரவேண்டும்'' என்று ஒரே அடியாய் மறுத்துக் கூறிவிட்டு, வெளியே போய்விட்டார்.

அதற்குமேல் என்ன செய்வாள் பாவம்! வீட்டுக்காரியும் வருத்தத்துடன் ராதாவை வழி அனுப்பினுள். அப்போது இரவு 9 மணியாகிவிட்டது. பேரிடி முழக்கத்தோடு மழை 'ஜோ'வென்று பெய்ய ஆரம்பித்துவிட்டது. இந்த வீட்டில் இனி நான் தங்கலாகாதென்று ராதா மழையிலேயே நனைந்தவாறு வெகு விரைவில் தன் வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தாள். அவள் மனத்தில் எவ்விதமான கலக்கமும், அதனுல் மார்பில் இடியும், மனத்தில் மின்னலும் உண்டாகின்றனவோ அதேபோல வானமும் போட்டி போட வாரம்பித்தது. தான் வீட்டிற்குச் சென்ருல், தன் கணவனின் துன்பத்தை எப்படித் தீர்ப்பது என்று மிகவும் மனமுருகி உடைந்து போய்விட்டாள். கண்களில் நீர் வடிவதுடன் பெருமழையினுல் முற்றும் நனைந்து சொட்டச் சொட்ட ஆகிவிட்டாள். எனினும் தான் இக் கடனைத் தீர்த்துவிட்டுத்தான் தன் கணவனைக் காண வேண்டுமென்று தீர்மானித்தவளாய் வீதியிலேயே ஓர் கடையின் வெளிப் புறத்தில் நின்று யோசித்தாள்.

அப்போது அவளுடைய பாலிய சிநேகிதையின் நினைவு உண்டாகியது. சரேலென்று அவள் வீட்டை யடைந்து கதவை இடித்து உள்ளே சென்று, தன் சிநேகிதையாகிய மீனும்பாளை நோக்கி, "மீனு! நீ என்னைக் கண்டு ஆச்சரியப்படுவதையும், வருத்தமுறுவதையும் உன் முகம் காட்டுகின்றது. அவைகளைப்பற்றிப் பிறகு பேசலாம். (நடந்த விஷயங்களைக் கூறி) இச்சமயம் நீ ஆதரிக்காவிடின், நாங்கள் இருவரும் தற்கொலை புரிந்துகொண்டுதான் இறந்துவிட நேரும். எங்களை நீ காப்பாற்றும் எண்ணமிருப்பின், என்னுடைய இந்த ஆபத்தான சமயத்தில் நீ ஆதரிக்கவேண்டும்.

வினு :—அவர் சதா யோசனை செய்துகொண்டே இருக்கிருரே? அவர் பத்திராசிரியரா, அல்லது நூலாசிரியரா?

விடை :—இரண்டுமில்லை. அவரால் மோசமடைந்த பேர்கள் கணக்கு இல்லை. இன்னும் யார் தன் வலையில் விழுவார்கள் என்று பார்க்கும் ஆஷாடபூதி.

உன் பர்த்தாவிடம் நானே கேட்கிறேன்" என்று கூறி, அவரிடமும் விஷயத்தைக் கூறி வேண்டிக்கொண்டாள்.

அவளுடைய பதிபக்தியையும், பரிதாபத்தையுங் கண்ட தம்பதிகள் மனமொத்து, சுமார் 350 ரூபாய் பெறும்படியான கடியாரச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து, "ராதா! இதோ இதைக் கொண்டு அந்த அற்ப மனிதரிடம் கொடு. நான் அவசரப்படவில்லை. முழுத் தொகையும் சேர்ந்த பிறகு இதைத் திருப்பிக் கொடு" என்று கூறி, மழையில் நனைகின்றாயே என்று உபசார வார்த்தைகளையும் சொல்லி, வழி அனுப்பினாள்.

ராதாவுக்குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. அவளுக்கு வந்தனம் கூறிவிட்டு, அதை எடுத்துக்கொண்டு, நேரே அந்த மனிதர் வீட்டிற்குச் சென்று தன்னுடைய நகைகள், சங்கிலி எல்லாவற்றையும் கொடுத்து, "ஐயா! உங்கள் நிர்த்தாக்ஷண்யத்திற்கும் கடின மொழிகளுக்கும் நமஸ்காரம். அதனால் ஆதியில் விளையாடிய சினேகிதையின் அன்பே என்னை இத் தருணம் காப்பாற்றியது. என் பர்த்தாவின் துயர் தீர்ந்தது. ஒரு வாரத்தில் பணத்தைக் கொடுத்துவிட்டு, இவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறேன். இதற்கு ரசீது தாரும்" என்று கேட்டு வாங்கிக்கொண்டு, சந்தோஷ சித்தத்துடன் மழையில் நனையும் வருத்தத்தையும் பொருட் படுத்தாது அதிக குதூகலத்துடன் தன் வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவளை வீட்டில் காணாது தேடி யலைந்து, அவள் வரவையே நோக்கி வெளியே வந்த அவளது கணவன் அவளை இடை வழியில் சந்தித்து, "என்ன ராதா! வெகு வீரமாகச் சென்றாயே! எங்குச்

வினா :—என்ன ஜோஷியரே! 'இவன் கையினால் சத்திரங்களும், மாடி வீடுகளும், பங்களாக்களும் கட்டுவான்' என்று ஜாதகம் பார்த்துச் சொன்னீரே! இவனுக்குத் தங்க நிழல்கூட இல்லையே! நீர் சொல்லிய ஜோஷியத்தின் பலம் என்ன வாயிற்று? கூறும் ஐயா?

விடை :— ஐயா! ஆத்திரப்படாதே! நான் சொல்லியதில் குற்றமில்லை. இவன் தொழிலோ கொல்லத்து வேலை செய்வதாம். இவன் கையினால் எத்தனை கட்டிடங்கள் கட்டியிருக்கிறான் நீயே சொல்.

சென்றாய்? என்ன ஈரத்துடன் சொட்டச் சொட்ட வருகிறாய்?" என்று கேட்கையில், ராதா "இதோ இதைப் பாருங்கள்" என்று அவள் கொண்டு வந்த ரசிதைக் கொடுத்தாள். இதைப் பார்த்த கிருஷ்ணன் கடகடவென்று பெருநகை செய்து, ராதா ஈரத்துணியுடனிருப்பதையும் மறந்து, "என் கண்மணீ! என்னைக் கொலை பாதகத்திலிருந்து தப்பச் செய்த காதலீ! இன்றே உன் திற மறிந்தேன். நானே மூடன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்" என்று தன் ஆனந்தத்தைத் தெரிவித்து, அவளைக் கட்டி யணைத்துக் கொண்டான். பின்னர், 'ராதா! முதலில் ஈர உடையை மாற்று' என்றதும், அவ்வாறே அவள் வேறு உடை யணிந்து வந்தாள்.

ராதா :—நாதா! நீங்கள் சொல்லியது எனக்கு விளங்கவில்லையே! அதென்ன கொலைபாதகமாவது? விளங்கச் சொல்லுங்கள்.

கிருஷ்ணன் .—கண்ணே! சென்ற வாரத்தில் ஒரு பாதகன் உன் பேரில் பலவிதமான குற்றங்களைக் கூறிப் பழித்துக் கடிதமெழுதியதோடு, நேரிலும் தாறுமாறாகக் கூறி உன்னை வைதான். நீ வேறு எவனுடனே கள்ள நட்பு கொண்டிருப்பதாயும், என்னை மோசம் செய்து கொன்றுவிட்டு, அவனோடு ஓடிவிடப் போவதாயும் தெரிவித்தான். இதைக் கேட்டவுடன் உண்மையில் என் மனம் குழம்பிப்போய் முழு மூடமாகிவிட்டது. எனக்குத் துரோகம் நினைக்கும் உன்னைக் கொலை செய்து விடவே முயற்சித்தேன். ஆனால், உன் முகத்தைப் பார்த்ததும் மிகவும் இரக்கமுண்டாகி விட்டது. இச் செய்தியை என் நண்பனிடம் தெரிவித்தேன். அவன் அதை நம்பவில்லை எனினும் சந்தேகம் நிவர்த்தியாவதற்கும் உன்னுடைய உண்மையை அறியும் பொருட்டும் அவன் ஒரு யுக்தி செய்யலாமென்று கூறினான்.

வினா :—எத்தனை பணம் சம்பாதித்தாலும் செலவாகிவிடுகிறது. பின்னும் மனைவி மக்கள் என்னை உபத்திரவிக்கிறார்கள். என்ன செய்வேன்?

விடை :—நீ சம்பளத்தை உன் கையில் வைத்துக் கொள்ளாமல், உன் மூத்த மகனோ, மகளோ, அன்றி மனைவியோ, இவர்கள் கையில் கொடுத்து விட்டால், தானே சிக்கனம் வந்துவிடும். இதுதான் வழி.

அதாவது, எனக்கு அவன் கடன் கொடுத்த மாதிரி கடிதம் எழுது வதும், நான் விசனிப்பதும், இதன் மூலம் நீ உண்மையில் அத்த கையவளாயின், இதை லக்ஷ்யம் செய்யாது அவனோடு சென்று விடுவாய் என்றும், இல்லையேல் விவகாரம் வேறு வழி செல்லும் என்றும் கூறினான். நானும் அவனும் அப்படியே நடித்தோம். உனது பரிசுத்தத்தையும் நீ என்பால் கொண்டுள்ள பிரேமையையும் அறிந்தேன். நான் உன்னைச் சோதிக்க, நீ உன் சிநேகிதையின் அன்பைச் சோதிக்க இரட்டைச் சோதனையாயிற்று. இவை எல்லாம் வீண் புரளியே. அதோ என் நண்பன் நகைகளுடன் வருகிறான் பார்" என்று கூறினான்.

இதைக் கேட்டதும் ராதாவுக்குப் பெரும் வியப்பும், திகைப்பும் உண்டாகி விட்டது. அதே தருணம் நகைகளுடன் அந்த மனிதன் வந்து, நகைகளை ராதாவிடம் கொடுத்துவிட்டு, "அம்மா! உங்கள் அன்பைக் கண்டு மெச்சினேன். கிருஷ்ணா! நான் சொல்லியது சரியாயிற்று! இனி இத்தகைய பேச்சை நம்பாதே" என்றான்.

ராதா :—நாதா! என்னைப் பற்றிச் சொல்லிய பாதகன் யார்? தயவு செய்து சொல்ல வேண்டும்.

கிருஷ்ணா :—நமது அண்டை வீட்டு அனந்தன்தான் என்ற தும், ராதா சீறி எழுந்து, "அந்தப் பயலா என்னைப் பற்றிச் சொன்னான்! அவனல்லவோ என்னைக் கொலை செய்யப் பல வழி களில் முயற்சிப்பதை வெட்கக்கேடு என்று வெளியிடாது அவ னது காலேஜின் பிரின்ஸ்பாலுக்கு, நேற்றுத்தான் அவன் துஷ்டச் செய்கையைப் பற்றிக் கடிதமெழுதியிருக்கிறேன். அதற்குப் பதில் வந்தால், தங்களுக்குக் காட்டலாமென்று நினைத்தேன். அதற்குள் இத்தனை சோதனையும் ஆய் விட்டதா? பேஷ்" என்றாள்.

வினா :—உனக்கோ சம்பாத்தியமில்லை. உன் பிதாவோ உனக்குப் பணம் கொடுப்பதில்லை. இத்தனை ஆடம்பரத்திற்கும் பணமேது?

விடை :—இதற்குத்தான் டம்பாச்சாரிகளான 10 சிநேகிதர்களின் துணை வேண்டுவது. அவர்கள் தலையைத் தடவினால்...

சங்கிலி சொந்தக்காரரிடம் போய்ச் சேர்ந்தது. ராதாவின் நகைகள் பழைய இடங்களை அடைந்தன. வந்தவனும் வீடு போய்ச் சேர்ந்தான்.

அதுவரையில் அந்த ராதாகிருஷ்ண தம்பதிகளின் மனோ உல்லாசமான வாழ்க்கை ஒருவாறு நடந்தேறியதெனினும், அன்று புதிய மணத்துடனும் புதிய இனிப்புடனும் என்றும் கண்டறியாத உள்ளன்புடன் கூடிய இன்ப வாழ்க்கையாக மாறியது. தம்பதிகள் அன்று நடந்த விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே ஆனந்தப் பூரிதமடைந்தார்கள். மனைவியும் சினேகிதையும் அமைந்தால் இவ்வாறல்லவோ அமையவேண்டும்?

["இந்தியா" 26—11—31]

அனாதைப் பெண்

சிறந்த டாக்கீ நாவல்

மனத்தை யுருக்கிக் கண்ணீரைப்
பெருகச் செய்யும் பலவித
சம்பவங்கள் நிறைந்த
மகத்தான நாவல்

அழகிய இரண்டாம் பதிப்பு
வெளி வந்துவிட்டதைக் கவனியுங்கள்.

விலை ரூபாய் 1—4.

3

படாடோப பரமேச்வரன்

ஓர் தடபுடல் பேர்வழி நாகரிக அலங்காரத்துடன் சதா சேவை கொடுப்பாரேயன்றி, அவரைச் சாதாரணமாகப் பார்ப்பதற்கே கிடைக்கமாட்டார். பரமேச்வரன் என்பது அவருக்குத் திருநாமம். அவருடைய நவ நாகரிகத் தடபுடலால் படாடோப பரமேச்வரன் என்ற பெயரும் தானுகவே பொது ஜனங்களின் சமர்ப்பணமாகக் கிடைத்தது.

அவருடைய எண்ணம் தான் மேனுட்டாரைப்போலவே இருக்க வேண்டுமென்பதால், அந்தப் பாவனையிலேயே சகலவிதங்களிலும் நடக்க வாரம்பித்தார். அதன் பயனுக சில காலத்திற்குள்ளேயே தனது தாய்ப் பாஷையை அடியோடு மறந்துவிட்டார். சிறு குழந்தைகளிடத்திலும் ஆங்கிலத்திலேயே, "கமான் பேபி! வாட் டூ யூ வாண்ட் பேபி?" என்று பேச வாரம்பித்தார். தொட்டிலினுள்ள குழந்தை அழுதால், அதைச் சமாதானம் செய்வதற்குக்கூட 'டோண்ட் க்ரை பேபி! யுவர் மதர் ஈஸ் கமிங்க்' என்றுதான் கூறுவார். அவரைத் திடீரென்று பார்க்கும் அன்னியர் அசல் சட்டைக்காரர் என்றே எண்ணிவிடுவார்கள். கால் சட்டையைக் கழற்றுவது பெருத்த அவமானம் என்று

வினு :—என்ன ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் எதிர் பார்க்கிருயே! ஏதேனும் விசேஷ முண்டா?

விடை :—என்னுருயிர்க் காதலி என்னை மோசம் செய்துவிட்டு வேறு ஒருவனை மணந்துவிட்டாளாம். அவர்களின் ஊர்வலம் இவ்வழியாக வரும்; அதனைப் பார்க்கவே காத்திருக்கிறேன்.

எண்ணுவார். தலையில் ஹாட்டு இல்லாதிருப்பின் தன் மானமே சிதறிவிட்டதாக நினைப்பார்.

முன்காலத்தில் ஆண்கள் தண்டா லெடுத்தல், கசரத் பழகுதல் முதலியனவும், பெண்கள் சோபனமடித்தல், கோலாட்ட மாடுதல் முதலியனவும், செய்ததால் தேகத்திலுள்ள நரம்புகளெல்லாம் நல்ல வலிவுற்று அவர்களிஷ்டப்படி யெல்லாம் ஆட்டுவதற்கு வசியமாயிருந்தன. ஆனால் மேற்கூறிய தேகாப்பியாசங்களெல்லாம் அநாகரிகமாகக் கருதப்படும் இக்காலத்தில் நரம்புகள் திமிர் பிடித்து நிற்கின்றதைக் கண்டு மனமுருகிய தலைமயிர் அவர்களின் இஷ்டப்படி ஆட்டி வைப்பதற்கு வணங்கி யிருப்பதால், நம் கதா நாயகர் நினைத்தபோதெல்லாம் ஒவ்வொருவிதமாக அதைக் கத்தரித்து (க்ராப் செய்துகொண்டு) அட்டகாசம் செய்வார்.

"ஔபாசனம், அக்னி ஹோத்திரம் இவை எல்லாம் எதற்கு? இவைகளை எல்லாம் சேர்த்து ஆகாயத்தை யளாவும்படிப் புகை கிளம்ப ஒரே விதமாய்ச் செய்யும் நூதன யாகம் இதுதான்" என்று நிலை நாட்டிக் காட்டுவதுபோல, வாயில் சிகரெட்டைச் சதா கவ்விக்கொண்டே இருப்பார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், நமது கண்முன் தோன்றிய ஒவ்வொரு சிறிய தேசத்திலும் அவர்கள், "நம் நாடு, நம் நாட்டுச் சாமான், நமது மதம், நமது பாஷை, நமது ஜாதி" என்ற சுதேச பக்தி மேலிட்டு சிம்ஹம்போல் முழங்கும் இக்காலத்தில் அநாதி யாகவுள்ள நம் பரத கண்டத்தின் புனிதமான பாகமாகிய இத் தமிழ் நாட்டில், பல மத ஸ்தாபகர்களும், நாயன்மார்களும், ஆழ்வார் ஆசார்யர்கள் முதலியோர் அவதரித்த இந்தப் புண்ணிய பூமியில் பிறந்து, வளர்ந்து, தமிழன்னையின் பாலை உண்டு, உறங்கி வாழ்பவர்களில் சிலர் தங்களது தாய்ப் பாஷையை அடியோடு

"என்னுருயிர்த் தோழியே! முன்பு என்பால் நீ காட்டிய அன்பெல்லாம் உண்மையானதா? ஆழமானதா? அந்தோ! அப்படியாயின் அத்தகைய மனம் பசையற்றுப் போகுமா? உன் பார்வையே வேறு மாதிரியாக ஆய் விட்டதே! நீயா உண்மை சிநேகிதை! ஆ! மோசம் போனேன்" என்கிறுள் ஒரு மாது.

மறந்து, தமது சுயமரியாதையையும் இழந்து, மேனாட்டு ஆடம்பரத்தில் கண்மூடித்தனமாக மூழ்கி, தமது நடையுடை பாவனைகளில் மாறுபட்டு, 'நம்மைப் பார்ப்பவர்கள் நாம் ஹிந்து வல்ல' என்று நினைக்க வேண்டுமென்பதுடன் நில்லாது, தமது பெயரைக் கேட்பவர்களும் அவ்வாறே நினைக்க வேண்டுமெனக் கருதி, கோபாலன் என்பதை ஜி. பால் என்றும், ராமசாமி என்பதை ராம்ஸே என்றும் குறைத்தும், வெட்டிக் கொலை செய்தும் வைத்துக் கொள்ளுதல்போல, நமது பரமேச்வரனும் தனது பெயரை பி. வாரன் என்று மாற்றி வைத்துக் கொண்டு, ஒரு துரை மகனாக விளங்கினார். ஸர்வ மங்களத்தையு முண்டாக்கும் சிவபிரானின் முக்கிய நாமங்களிலொன்றான பரமேஸ்வரன் என்பதை மேற்கண்டபடி ஆங்கிலத்தில் குறுக்கியதைத் தமிழில் பி. வாரன் என்று எழுதினால் எவ்வளவு கர்ண கடூரமாகவும் கேவலமாகவுமிருக்கின்றது பாருங்கள். இதுவும் கலியின் கோலாகலமோ! நம் தாய் நாடு முன்னேற்றமடையும் காலம் என்று வருமோ யார் அறிவார் பரமேச்வரா!

இத்தகைய உத்தமருக்குத் துரைத்தன உத்தியோகத்தில் ஊர் ஊராகச் சுற்ற வேண்டிய வேலை அமைந்தது. இப்படிப்பட்டவருக்குக் கர்நாடக சங்கீதத்தில் மாத்திரம் எப்படியோ அதிகப் பற்றுதலுண்டாயிருந்தது அதிசயமே! வாயில் சதா ஏதோ ராகம் இழுத்துக் கொண்டே இருப்பார். சங்கீதக் கச்சேரிகளுக்குத் தவறாமல் செல்வார். இவர் ஒருசமயம் தன் உத்தியோகத்தின் நிமித்தம் வெளியூருக்குச் சென்றிருந்தார். அங்கு வீதியில் ஒரு பிச்சைக்காரன் வெகு பக்தியோடு,

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி,

ஒருவரிடத்தில் தாம் காதலைப் பூர்ணமாகச் செலுத்திவிட்டால், அவர்கள் நிலைமையே பித்தர்போலாய் விடுகிறதாம். எங்கேனும் வரும் சாக்கில், போகும் சாக்கில் அவர்களிடம் பேசுவதற்கும் அவர்கள் கடாக்ஷமேனும் தம்மீது படாதா என்றும் ஏங்கி எதிர்பார்ப்பார்களாம்.

ஓடினேனோடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்''

என்று திருமங்கையாழ்வார் பாடிய அருமையான பாசுரத்தை இனிமையான தன் சாரீரத்தினால் அழகிய ராகங்களை யமைத்துப் பாடினான். நமது பரமேச்வரன் இந்தக் கானத்தைக் கேட்டு ஆனந்தித்து அவனைப் பன்முறை பாடச் சொல்லிக் கேட்டுப் பின்னர் தனது டாம்பீகத்தைக் காட்டும் பொருட்டு, அவனுக்கு ஒரு ரூபாயைப் பரிசாகக் கொடுத்தார். அந்தப் பாடலை அந்த நிமிடம் முதல் ஓயாமல் தான் பாடிக்கொண்டே இருந்தார்.

அன்று தன் வேலை முடிந்ததும் அவ்வூரிலுள்ள ஆற்றில் குளிக்கச் சென்றார். நீந்தலடிப்பதில் அளவற்ற பிரியம் அவருக்குண்டு. அவ்வூர் வாசிகள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் அதுவேயாகையால், அங்கு பெண்கள் குளத்தில் தீர்த்தம் எடுத்துக் கொண்டு சென்றுகொண்டிருந்தார்கள். நம் பரமேச்வரன் ஆற்றில் இறங்கிக் குளிக்கையில் பிச்சைக்காரன் பாடிய வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் என்ற பாசுரத்தை வழக்கம்போல முன்னடி பின்னடியாகக் குளறித் தன் போக்காகப் பாடிக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு அடியையும் திருப்பித் திருப்பி நான்குதரம் ராகத்தில் இழுத்து 'வாடி இன்னேன் நாடி நாடி நான் வாடினேன்' என்று அதன் சரியான அர்த்த வாசனையைச் சற்றும் அறியாது சங்கீதத்தின் ருசியால் மட்டும் பாடினார்.

அங்கு தண்ணீர் மொள்ளும் பெண்மணி யொருத்தி, இதைக் கண்டு இவரைச் சுத்த சோதாவென்று எண்ணி, "கட்டேலே போரவனே! கரியாப்போரவனே! கம்மனாட்டி! ஸ்திரீகள் இறங்

கையிலிருந்தால் பணம் செலவாகிவிடுமென்று பாங்கியில் போட்டால் அதற்கும் செலவு வந்துவிடுகின்றது. ஐந்து வருடங்கள் வாங்குவதில்லை என்று தபாலாபீஸில் நிபந்தனையோடு கட்டினால், அதற்கும் அவசரச் செலவு வந்து வாங்கும்படியாய் விடுகின்றது. ஒட்டைக் கையில் நிற்கும் காலம் தான் எப்போதே தெரியவில்லை.

கும் துறையில் சோதாத்தனமாக இறங்கியதுமல்லாமல், அப்போ திலிருந்து வாடி வாடி நான் வருந்தினேன் மனத்தால் என்று சோதாப் பாட்டு பாடுகிருயா! ராஸ்கல் படவா! இரு. இவ்வூர் மணியக்காரரிடம் சொல்லி உன்னை என்ன பண்ணுகிறேன் பாரு" என்று தாறுமாருகக் கூச்சலிட்டு, மண்ணை வாரித் தூற்றிப் பெருத்த சத்தமிட்டாள்.

உண்மையில் நமது பரமேஸ்வரனுக்கு ஆடம்பரத்தில் விருப்பமேயன்றிச் சோதாத் தன்மையில் மனம் இறங்கியவர் அன்று. ஆதலால் அந்த அம்மாளின் சுடுசரம்போன்ற வார்த்தைகள் இவர் காதில் பட்டதும் பிரமித்தார். தான் எத்தகைய அக்கிரமமும் செய்யாதிருக்கையில், இந்த அம்மாள் தாறுமாருகத் திட்டுகிருளே என்று எண்ணி முற்றிலும் கேட்டார். அதன் பிறகே தான் இந்தத் துறையில் தெரியாத்தனமாய் இறங்கிவிட்ட முட்டாள் தனம் ஒன்று; அந்தப் பாடலில் ஏதோ கெட்ட அர்த்தமிருப்பதாக அந்த அம்மாள் கண்டு கொண்டது ஒன்று—ஆக இரண்டு குற்றங்கள் தன்மீது தன்னை யறியாமல் மூண்டு விட்டதை யறிந்தார். இரண்டாவது குற்றத்தை யறிந்ததும் அந்தப் பிச்சைக் காரன் மீது கோபம் தாண்டவமாடியது. மணியக்காரர் முதலியோர் வந்துவிட்டால் தன் மானம் போய்விடுமே என்று நடுங்கினர்.

"ஐயோ! பாவி பிச்சைக்காரப் பயல் இத்தகைய கீழ்த்தரமான—வல்கரான—கெட்ட பாட்டையார் பாடினுன்! இந்த அம்மாளிடம் இத்தனை வசவு வாங்குவதற்காகவா, நான் ஒரு ரூபாயை அந்தப் பயலுக்குக் கொடுத்து இந்த ஆபாஸப் பாடலைக் கற்றுக் கொண்டேன். "சீச்சீ! தமிழ்ப் பாட்டுக்களெல்லாம் சோதாப் பாடல்கள்போல் இருக்கிறன! அந்தப் பிச்சைக்காரன் என் கண்ணில் அகப்பட்டால் நசுக்கிவிடுவேன்" என்று தனக்குள் பலவித

தாமே கண்டறியும் அனுபவங்களை எல்லாம் ஓய்ந்த நேரத்தில் ஒன்று கூட்டி நினைத்துப் பார்த்தால், ஆஹா! என்ன அற்புதம். அது ஓர் தனிச் சுவை. ஆனந்தத்தில் பரவசமும், ஏமாந்தோமே, மோசம் போனேமே என்று நினைக்கையில், தேகம் படபடத்துப் பெருமூச்சு உண்டாவதும் இது போலப் பற்பலவித உணர்ச்சிகளை நாமே அனுபவிக்கலாம்.

மாக எண்ணி, மனம் நொந்து அந்த அம்மாளிடம் வந்து, "அம்மா! மன்னிக்க வேண்டும். நான் நீங்கள் கூறியபடி சோதா வன்று; போக்கிரியன்று. இந்தத் துறை ஸ்திரீகளுக்குப் பிரத்தி யேகம் என்று எனக்குத் தெரியாது. நான் இவ்வூருக்குப் புதிய வன். நான் பாடிய பாடல் சோதாப் பாட்டு என்று எனக்குத் தெரியாது. ஒரு ரூபாய் கொடுத்து ஒரு படவாப் பயல் பிச்சைக் காரனிடம் கற்றுக் கொண்டதன் பலன் இது. என்னை மன்னி யுங்கள்" என்று அறை குறையான தமிழில் கூறி, வணங்கிப் பின் அவ்விடம் விட்டகன்றார்.

பிச்சைக்காரன் எங்கு கிடைப்பான் என்று அவர் தேடினார். மறுதினம் காலையில் வீதியில் அதே பிச்சைக்காரன் பாடிக் கொண் டிருக்கும் இடத்தில் கூட்டம் நிறைந்திருந்தது கண்டு, அதை விலக்கிக் கொண்டு அங்கு சென்று அவனையடிக்க ஓடினார். அச் சமயத்தில் அந்தப் பிச்சைக்காரனே அந்த அருமையான பாட் டைப் பதம் பதமாகப் பிரித்து அர்த்தம் சொல்லிக் கொண்டிருப் பதைக் கேட்டுத் திடுக்கிட்டார். அந்தப் பிச்சைக்காரன், "ஆஹா! நம் பாஷையினுள்ள பெருமையும் மகிமையும் அறிந்தோர்க்கல் லவா தெரியும்? தாய்ப் பாஷையின் ருசியறிந்தோர் இத்தகைய அரு மையான பாடல்களை விடுவார்களா?" என்று பெரியதொரு பிர சங்கம் செய்து கொண்டிருந்தான்.

தான் எண்ணி வந்த ஆத்திரத்தினின்றும் உண்மையிலேயே மாறுபட்டு, "ஹா! இந்தப் பாசுரம் இத்தகைய அழகுடையதா? இந்தப் பிச்சைக்காரனுக்குள்ள ஞானம் நமக்கில்லாது போயிற்றே! இவன் இதன் அர்த்தத்தை விளக்காது சும்மாவிருந்திருப்பின், நான் அநியாயமாய் இவனை அடித்திருப்பேனே! அந்த ஸ்திரீ கல்வியில்லாத மூடமாகையினால், கேவலமான அர்த்தம் செய்து கொண்டாள். நானோ ஆங்கிலத்தில் மூழ்கியதால் தாய்ப் பாஷையின்

நாம் சிலரிடத்தில் ஓர் முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கேட்கும் போதுதான் அவர்கள் அதனிலும் முக்யமானதைக் கவனிப்பதுபோல தட புடல் செய்து, சிள்ளென்று சீறி விழுந்து, தங்களுடைய இஷ்டமில்லாத் தன்மையைக் காட்டி விடுகிறார்கள்.

அருமையை இழந்தேன். நல்ல வேலை பிழைத்தோம். சீச்சீ! இனி நாம் அதிகமாகத் தாய்ப் பாஷையில்தான் பேசவேண்டும்; பாடல்களின் அர்த்தத்தை அறியவேண்டும்” என்று எண்ணிப் பேசாது போய்விட்டார்.

* * * *

பின்னர் ஒரு தினம் வேறு ஊருக்குச் சென்றார். அங்கு கிராமபோன் கம்பெனி ஒன்று புதிதாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். ஏற்கெனவே தான் வாங்கியுள்ள கிராமபோனுக்கு அங்குள்ள கடையில் கே. பி. சுந்தராம்பாள் பாடியுள்ள “வாளி பாய்ந்தோரு மான் வந்ததுண்டோ வள்ளி!” என்ற ப்ளேட்டு ஒன்றும், நம்பிக்கை கோண்டேல்லோரும் கைராட்டைச் சுற்றுவீர்!! என்ற மற்றொரு ப்ளேட்டும் வாங்கிக்கொண்டார். அந்த ஊரிலுள்ள வேலையானதும் அதற்கடுத்துள்ள பட்டிக்காட்டிற்கு நில விஷயமாகச் சென்றார். அங்கு அவருக்குத் தூரத்து உறவுக்காரர்கள் இருப்பதால், அவர்கள் வீட்டிலேயே இறங்கினார்.

அது பட்டிக்காட்டு வீடாகையினால், இவருடைய ஆடம்பரத்திற்கு ஏற்ப மேஜை நாற்காலிகள் ஒன்றுமில்லாது எங்கு பார்த்தாலும் நெல்லுக் களஞ்சியமும், தொம்பைக் கூண்டுகளும், வைக்கோல் பிரிகளும், கூடைகள், முறங்கள், கலப்பைகள், ஏற்றச் சால்கள், மாட்டு வண்டியின் கூண்டுகள், பெரிய பெரிய பானைகள் இவைபோன்ற இன்னும் கிராமத்தாருக்கு அவசியமான அனேக சாமான்கள்—இவர் என்றும் கண்டறியாதவைகள்—இருந்தன.

அவைகளைப் பார்த்ததும் அவருக்கு மனச் சமாதான மில்லாத ஒருவகையான வெறுப்பு உண்டாயிற்று. தான் தன் சாமான்களை வைக்கவும் உட்காரவும் இடமில்லாது க்ஷணநேரம் தவித்தார். இதற்குள் இவரைக்கண்ட வீட்டுக்காரர்கள், பெருத்த சந்தோஷமடைந்து, “ஹா! வாடாப்பா! பம்மு! (பரமேச்வரன் என்னும் உத்தமமான பெயருக்கு இங்கு வீட்டில் நேர்ந்த விபத்தைப்

மனமே ஏங்காதே! உன் பழைய சினேகிதர்களை நினைக்காதே. அந்த நேரத்தை உன் தொழிலில் செலுத்தினால் பயன் பெறலாம். கை விட்ட பண்டத்தைக் கனவிலும் எண்ணாதே.

பாருங்கள்) அம்மாஞ்சி குட்டீ! ஊரில் எல்லோரும் க்ஷேமமா? அத்தங்காவின் பெண் பிரசவித்தாளா? மாமாதாதா ஊருலிருக்கிறாரா! அம்மாஞ்சிமன்னி, அத்தாமன்னி எல்லோரும் க்ஷேமமா?" என்று கர்நாடகமாக உறவுமுறைகள் எல்லாம் விசாரித்தார்கள். ஒரு விசிப்பலகையின் மீதுள்ள சாமான்களை அப்புறப்படுத்திவிட்டு, அதில் இவரை உட்காரச் சொல்லித் தடபுடலாக மரியாதை செய்தார்கள்.

ஹாட்டும், ஸூட்டும், பூட்ஸுமாய் அட்டகாஸமாக வந்த பேர் வழியைக் கண்ட நாட்டுப்புறத்து வாசிகள் யாரோ ஒரு துரை அங்கு வந்து விட்டதாக முதலில் எண்ணினார்கள். அடுத்த நிமிடம் அவன் துரைமகனல்ல, அடுத்த வீட்டு கர்ணத்தின் உறவினன் என்று தெரிந்ததும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, எல்லோரும் இவ் வீட்டிற்கு ஓடி வந்து, சர்க்கரையை ஈ மொய்த்துக்கொள்வது போலப் பரமேச்வரனைச் சுற்றிக் கொண்டார்கள். அவர்களுடைய பார்வையும், நடையுடையும் அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அவன், அதை வெறுப்பாகக் காட்டிக் கொள்ளாமல் மௌனமாக நின்றான்.

அங்கு கும்பலில் இருந்த ஓர் கிழவி, "ஏண்டாப்பா! சுப்பு லக்ஷ்மியின் தம்பி, எங்க ஓர்ப்படிக்குத் தாதாவாக வேண்டும். அவருடைய பேரப்பிள்ளை வ்ருஷபத்வஜமிருக்கானே இல்லியோ! அவனுடைய பாமியாருக்கு மூத்த நாட்டுப் பெண்ணுடைய தங்கை சாசி இருக்கிறாளே! அவள் எனக்குச் சொந்த அத்தா மன்னியாக வேண்டும். சாசியின் நாத்தனார் பிள்ளையினுடைய பேரனுமே நீ! எனக்கு இத்தனை சமீபித்த உறவென்று தெரியாது போய்விட்டது. ஏண்டாப்பா! என்னை உனக்குத் தெரியல்லையா? வேங்கிடி பாட்டி என்று கேள்விப் பட்டதில்லையா! உன்னைப்

முன்பின்னறியாத அன்னியர் வீடாயினும், சில தரமே பழகின மனிதர்களாயினும் அவர்களின் வீட்டில் சுதந்தரமாகச் சிலர் வந்து உட்கார்ந்து விடுகிறார்கள். சிலருக்கோ தம் பெற்றோராயினும், உடன் பிறந்தோராயினும், சொந்த உற்றோராயினும் ஒரு விசேஷ நாளைத் தவிர மற்றைய நேரத்தில் செல்வதற்குச் சங்கோஜமாய் விடுகின்றது.

பார்க்க வெகு சந்தோஷமாய் இருக்கிறது. தீர்க்காயிசா இரு டாப்பா!" என்று அவள் ஆசீர்வதித்து முடிப்பதற்குள், அந்தப் பாட்டியின் மகன் வெகு பரபரப்புடன் ஓடிவந்து, "ஹ ஹ ஹ ஹ என் எஎனக்க்கு இ இ இ இ இப்போதான் தெ தெ தெ தெ தெ தெரியும். ந ந ந ந ந நம்ம கு கு கு கு கு கு குடும்பத்திலே ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒன்னெப் போ போ போல அ அ அ அ அ அதிர்ஷ்ட சா சா சா சாலி ஒ ஒ ஒ ஒ ஒ ஒத்ரு மில்லேப்பா! ரா ரா ரா ரா ராஜாப்போலே ச் ச் ச் ச் ச் ச் ச் ஷோக் கா இ இ இ இ இ இ இ இருக்கிறே க க க க க க க க க காப்பி சாப்பிட்டாயா? இ இ இ இ இதோ ப ப ப் ப பக்கத் தூருக்கு பொ பொ பொய் கொ கொ கொ கொ கொட்டை வா வா வாங்கி வந்து வந்து வி வி வி விடுகிறேன்" என்று பாவம் ஒரு பதம் முடிவு பெறுவதற்கு ஒரு நாழிகை திக்கித் திக்கிப் பேசி, தன் அபிநயத்திலேயே தனது அன்பைக் காட்டினர்.

நமது பரமேச்வரனுக்கு இது பெரிய வேடிக்கையாகத் தோன்றியது. அவனுக்குப் பதில் பேச வேண்டுமென்று ஆசை தூண்டியது. எனினும் ஆங்கிலத்தைவிட்டுத் தமிழில் பேசப் பிரியப்படவில்லை. ஆகையினல், "நான் வரும்போது ரயிலிலேயே காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் வந்தேன். உங்கள் அன்புக்காக நான் மிகவும் மெச்சுகிறேன்" என்று ஆங்கிலத்திலேயே கூறினன்.

அங்குள்ளோருக்கு ஆங்கிலமே தெரியாதாகையினல், இன்ன தென்று தெரிந்து கொள்ளமாட்டாது விழித்தார்கள். பின்னும் ஏதேனும் அதிகமாய்ப் பேசினல் துரைமகனுக்கொப்பாகிய நம்

வினு :—இன்று ஏகாதசியாயிற்றே! சுத்த பட்டினியோ தாங்கள்? ஐயோ பாவம்!

விடை :—சாஸ்திரம் எழுதிய காலத்தில் இல்லாத பொருள்களை இப் போது சாப்பிட்டால் குற்றமில்லை என்று ஒரு புராணிகர் சொன்னர். அக்காலத்தில் காப்பி, டீ, கோகோ, உருளைக்கிழங்கு முதலியவை கிடையா தல்லவா! அவைகளை மட்டும் மூன்று வேளைதான் சாப்பிட்டேன்.

பி. வாரனுக்குக் கோபம் வந்துவிடப் போகிறதே என்று அவர்கள் பேசாதிருந்துவிட்டார்கள்.

அங்குள்ள மற்றொரு கிழவர், இவன் வருகையை அறிந்து கொண்டு ஓடி வந்தார். இந்தத் துரைமகனிடம் பேசுவதற்குப் பாக்கியம் செய்யாத ஊமையாக அவரைப் பிறப்பித்துவிட்டார் கடவுள். இவனுடைய வேஷத்தையும் ஷோக்கையும் கண்ட ஊமை, மே மே பெ பெ க க பெ ம் ம் ம் மு மு மு ப் ப் ப பே என்று தன் பாஷையில் மிகவும் ஸ்வர ஸாஹித்யத்துடன் பேசிக் கொண்டே இவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

ஊமையின் பிடியோ குரங்குப் பிடியாக இருப்பது கண்டு சீற்றங்கொண்ட நமது வாலிபன் டோண்டு டச்சு மி. என்னைத் தொடாதே! என்னைத் தொடாதே! என்று ஆங்கிலத்தில் கூறிக் கொண்டே கையை இழுத்துக்கொண்டு விலகிநின்றான். இதற்குள் வீட்டுக்காரன் எல்லோரையும் விலக்கிவிட்டு, அவனைப் பால் சாப் பிடும்படியாக அழைத்துச் சென்றான். பரமேச்வரன் காப்பிக் குடியில் போட்டிப் பந்தயம் வைத்தாலும் ஜெயிக்கக்கூடிய பேர் வழியாதலால், அங்கு காப்பி கிடைக்காததே அவனுக்கு வருத்த மாகிவிட்டது. ஆயினும் பி. வாரன் தட்டாமல் காப்பிக்குப் பதிலாக அரைப்படி பாலை ஆவலோடு குடித்தான்.

பிறகு ஜனங்கள் தம் தம் அலுவலாகச் சற்றுச் சென்றார்கள். நமது வாலிபன் போஜனத்தை முடித்துக்கொண்டு, தன் வேலை விஷயமாகக் கழனிக் கட்டிற்குச் சென்றான். அவ்வீட்டிலுள் ளோர் பட்டின வாசத்து மனிதர்களிடம் பழகியதுமில்லை; பட்டி னத்தைப் பார்த்ததுமில்லையாகையினால், சுத்த பட்டிக்காட்டில் நம்பர் ஒன்றாக விருப்பவர்கள்.

ஒருவருடைய மகன் செய்துள்ள குற்றத்தை அனுபவித்த பிறர் அதைத் தந்தையிடத்தில் ஒருகாலத்தில் தெரிவித்தால், “ஹா! என் மகன் இப்படிச் செய்தே இருக்கமாட்டான்” என்று அவர் கண்டிப்பாய்க் கூறிவிடுகிறார். பின்னும் சில தந்தைகளோ, பிறர் குற்றத்தைக் கவனிப் பதைவிடத் தம் மக்களின் குற்றத்தையே கவனித்துத் திருத்துகிறார்கள்.

வந்த விருந்தாளி காப்பி குடிப்பதற்காகப் பக்கத்து ஊருக்கு ஆளையனுப்பி கொட்டை வாங்கி வந்து வறுத்து இரண்டாம் வேளைக்குக் காப்பி போட்டார்கள். அதோடு பலகாரம் என்ன செய்வதென்கிற கேள்வி பிறந்தது. அவ்வீட்டுக் கிழவி, தன் மகளை அழைத்து, "அடீ! சின்னுணீ! அம்மாஞ்சி குட்டி நாசூக்கா சாப் பிடுகிறவன். அவனுக்கு ரவையிலேயே ஏதேனும் செய்துவை" என்றாள். பெண்ணும் அப்படியே ஆகட்டும் என்று கூறியவாறு வாலிபனின் மூட்டைகளை எல்லாம் கிளறிப் பார்த்தாள். அதில் அவர்களுக்கு விசித்திரமான சாமான்கள் இரண்டு இருந்தன. கிராமபோன் பிளேட்டு ஒன்றும், காலுக்கு பூட்ஸ் போடுவதைத் தள்ளும் கருவி துடுப்பு போன்றது ஒன்றும் இருந்தன. அவற்றைக் கண்ட சின்னுணி "அம்மா! இதோ பாரடீ! அம்மாஞ்சி ரவாதோசை செய்யும் கல்லும் துடுப்பும் புதியதாக வாங்கி வந்திருக்கிறான். இங்கு இத்தகைய அழகான சாமான்கள் அகப்படாது என்று அவ னுக்குத் தெரிந்துதானடீ வாங்கி வந்தான். அவசரத்தில் நம் மிடம் கொடுக்க மறந்து விட்டான் போலிருக்கிறது. இதிலேயே அழகாக தோசை வார்க்கிறேன். என்ன வேடிக்கை யம்மா இது! பட்டினத்து ஷாப்பில் எந்தச் சாமான்கள், துணிகள் வாங் கினாலும் அதில் சீட்டு (லேபில்) ஒட்டியிருக்கும் என்று நாணு சொல்வாளே! அப்படியே தோசைக் கல்லிலும் அதன் விலை, கடையின் பெயர் முதலிய ஏதோதோ எழுதி இருக்கிறது. அதை அலம்பிவிட்டு வடைபோல நடுவில் பொத்தலைவிட்டுச் சுற்றிலும் ரவுண்டாகச் செய்தால் தோசை சரியாகிவிடும்" என்று சொல்லிக் கொண்டே அந்த இரண்டையும் எடுத்துக்கொண்டு போய் விட்டாள்.

வெளியில் சென்ற வாலிபன் திரும்பி வந்து தன் உடைகளைக் கழற்றிவிட்டு, இரண்டாம் வேளை குளிப்பதற்குச் சென்றான்.

சில மனிதர் தங்களுடைய கெட்ட எண்ணத்தைத் தாங்களே வெளிப் படுத்திக் கொள்கிறார்கள். அந்தக் கொள்ளிகள் தாமும் வந்து உதவி செய்வதில்லை; பிறர் செய்தால் அவர்களையும் பகைக்கின்றார்கள். இந்தத் தரும சங்கடத்தில் அகப்பட்டவர்கள் என்ன செய்வார்கள் பாவம்!

அவ் வீட்டுக் குழந்தைகள் இவனுடைய (ஹாட்டு) டொப்பியைப் பார்த்து, அது ஒரு கூடை போலிருந்ததால் அதைக் கூடை என்றே எண்ணி விளையாடுவதற்கு எடுத்துக் கொண்டுபோய் விட்டன. தாங்கள் ஏதோ வீடு கட்டுவதுபோலும் சிற்றுள் பசங்கள் சுண்ணாம்பு சேறு முதலியன கொடுப்பதுபோலும், பத்துக் குழந்தைகளாகச் சேர்ந்துகொண்டு, பின்னும் சில கூடைகளில் உடைந்த செங்கல், மணலைக் கலந்த சேறு முதலியன வாரிக் கொட்டி விளையாடுகையில், இந்த ஹாட்டைச் சேறு வாரும் கூடைக்குப் பதிலாக உபயோகித்துக் கொண்டிருந்தன.

வீட்டுக் குழந்தைகளிலேயே சற்று வயதான குழந்தைகள் இவனை விட்டுப் பிரியாமல் சுற்றிக்கொண்டே இருந்தன. இந்தத் துரைமகன் குளித்துவிட்டு அங்கிருந்த ஒரு பெண்ணை யழைத்து—கெட் மி மை டவல்—என் சவுக்கத்தைக் கொண்டு வா—என்று ஆங்கிலத்திலேயே கூறினான். அந்தப் பெண்ணுக்கு அது புரியாமையினால் விழித்தது. பிறகு டவல் கொண்டா டவல், டவல் என்றான். சவுக்கம், (தளுவம்) என்ற தமிழ்ப்பதம் அவனுக்கு மறந்து போய்விட்டது.

இது கேட்ட அந்தப் பெண், "மேளக்காரர்களின் செட்டில் டவில் என்பதுதான் இவன் கேட்கிறான்" என்று நினைத்துக் கொண்டு, "என்ன அம்மாஞ்சிதாதா! நான் எப்படி டவிலைத் தூக்குவேன்? என்னால் முடியாது. மேலும் நாங்கள் என்ன மேளக்காரர்களா? எங்கள் வீட்டில் டவில் இல்லை. எங்கப் பாவுக்கு, க்ஷவரம் செய்யும் குப்பன் வீட்டில்தான் அது இருக்கிறது. அவன் வீட்டிற்குப் போய்க் கொண்டு வரச் சொன்னால் அவன் அதைக் கொண்டு வருவான். அது உங்களுக்கு வாசிக்கத் தெரியுமா! நீங்கள் மேளக்கார ஜாதியா! மேளக்காரர்கள் எல்லாம் இந்த ஊரில் அம்பட்ட ஜாதியாயிற்றே! தாங்கள்

குழந்தைகளுக்குப் பழக்கம் பெரியோரிடத்திலிருந்து வருகிறது. பெரியோர் அன்னியர் வீட்டில், "அது அப்படி; இது இப்படி" என்று குறை கூறினால், அதைக் கேட்கும் பிள்ளைகளும் வாய்க் கூசாது பழித்துச் சிறுவயதிலேயே கெட்ட பெயர் வாங்கி விடுகிறார்கள்.

அம்பட்ட ஜாதியா?" என்று கேட்டதும் அவனுக்கு ஒருபுறம் கோபமும், ஒருபுறம் அவமானமும் ஒன்று கூடி வதைத்தன. அந்தப் பெண்ணைப் பிடித்து, பளீர்! பளீர்!! என்று அவன் இரண்டு அறைவிட்டு, "கடிச் சிறுக்கி! என்னை அம்பட்டன் என்கிறாயா?" என்று ஆங்கிலத்தில் கூறித் தள்ளிவிட்டான். அது அழுது கொண்டே ஒரு மூலையை அலங்கரிக்கச் சென்று விட்டது. இதைத் தன் பெரியவர்களிடம் கூறினால், 'பணக்கார அம்மாஞ்சியை நீ என்ன சொன்னாய்?' என்று தன்னையே அடிக்கப் போகிறார்களே என்று பயந்து, அதை வெளியிடாது அடக்கிவிட்டு, அந்தப் பெண் வெளிக் கிளம்பாது பதுங்கினாள்.

பிறகு இந்தப் பிரபு, ஸ்நானத்தை முடித்துக்கொண்டு தன் அழகிய கிராப்பை வாருவதற்குத் தன் பெட்டியைப் பார்த்தார்; சீப்பைக் காணவில்லை. "அடாடா! ரயிலில் தலை வாரும்போது அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட்ட ஞாபகம் வந்தது. இப்போது தலைவார என்ன செய்வான் பாவம். அங்கிருந்த ஒரு சிறுவனை அழைத்து (ஐ வாண்டு கோப்பு) எனக்குச் சீப்பு வேண்டும் என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

"என்னது? சரியாச் சொல்லு. என்ன பாஷை பேசுகிறாய்? இந்தப் பாஷை எனக்குத் தெரியாது" என்றது அப்பையன். முன்னர் சவுக்கத்திற்குத் தமிழ் மறந்து போய்விட்டதுபோல, சீப்பின் கதியும் ஆயிற்று. ஆகையால், "உன் அம்மாவைக் கேட்டு கோம்பு வாங்கி வா" என்று ஆங்கிலமும் தமிழும் கலந்து கூறினான்.

இதைக் கேட்ட பையன் ஓட்டமாக உள்ளே ஓடி, ஓர் ஈயப் பாத்திரத்தில் கமகமவென்று மணக்கும் குழம்பைக் கொண்டு வந்து எதிரில் வைத்தான். குழந்தைகளின் பாஷையில் குழம்பு என்பதற்குக் கோம்பு; தயிறு என்பதற்கு தச்சி; பருப்பு என்

வீட்டிலிருக்கும் அபூர்வ பொருளாயினும் அதன்மீது ஆசை அதிகரிப்பதில்லை. அதைக் கண்ணாலும் பாராமல் போட்டு வைப்பது. அதே பொருளைப் பிறர் இரவல் கேட்க வரும்போதே அதன்மீது அளப்பரிய அபிமானம் பிறந்துவிடுகின்றது. இரவல் கொடுக்கத் தயக்கம். தாக்ஷண்

பதற்கு பப்பு என்பது போன்ற சொற்கள் சகஜமல்லவா ? கோம்பு என்றால் பையன் குழம்பென்று தீர்மானித்தது வியப்பல்லவே !

குழம்பை அவனெதிரில் வைத்துவிட்டு, "அம்மாஞ்சி தாதா! நீங்கள் வெறுங் குழம்பையா சாப்பிடுவீர்கள். உங்களுக்குச் சாதம், கறி ஒன்றும் வேண்டாமா ?" என்றான்.

இதைக் கேட்ட பி. வாரனுக்கு உண்மையில் தாங்க வியலாத அவமான முண்டாகிவிட்டது. "ஐயோ ! இந்த வெட்கக்கேடு வெளியில் தெரிந்தால் அவமானம்" என்று எண்ணி, "இது வேண்டாம் ; உள்ளே கொடுத்துவிடு" என்று சமிக்ஞை செய்து அனுப்பினான். பையனும் குழம்பை உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டான்.

இதைக் கண்ட சின்னாணி, "ஏன் அம்மாஞ்சி ! உனக்காக மொச்சைக் கொட்டையும், கீரைத் தண்டும் சேர்த்துக் குழம்பு வைத்தேனே ! அது உனக்குப் பிடிக்காதா ! ஏன் அனுப்பிவிட்டாய் ?" என்றாள்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று யோசித்தான். தனது அவமானத்தை மூடி, சமயத்திற்குத் தக்க பதிலளிக்க எண்ணி, "குழம்பு வாஸனை என் மூக்கைப் பிளந்ததால் என்ன குழம்பு என்று கேட்டு வரச் சொன்னேன். பையன் தெரியாமல் வாங்கி வந்துவிட்டான் ; ஆதலால், அனுப்பினேன். சாப்பிடும்போது குழம்பு போட்டுக் கொள்ளுகிறேன்" என்று தட்டித் தடுமாறிக் கூறித் தப்பித்துக்கொண்டான்.

பிறகு அடுத்த வீட்டுப் பையன் அங்கு வந்து அவனருகிலேயே உட்கார்ந்திருந்தான். தனது ஜேபியில் வைத்திருந்த சினிமாப் படத்தை எடுத்து, "பையா ! உனக்கு ஸினிமா பிக்சர் வேண்டுமா ?" என்றான்.

பிக்சர் என்கிற ஆங்கிலப் பதம் பிச்சை என்று பையனுக்குப் பொருள் பட்டது. அதேசமயம் அந்தப் பையனின் தகப்பனாரும்

யத்திற்குக் கொடுத்தபின் சொன்ன தவணையில் வராவிடின் அதனால் மனஸ்தாபமும் ஏற்படுகின்றது. இதுகாறும் பார்ப்பார் கேட்பாரின்றி உள்ளே கிடந்த பொருள்தானே என்ற சாந்தம் எங்கேயோ மறைகின்றது.

பாட்டியும் இதைக் கேட்டுக்கொண்டே வந்துவிட்டதால், அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏண்டாப்பா! உன் பணமானால் உன் வரையில் வைத்துக்கொள். நாங்கள் ஏழைகள்தான். பிச்சைக்காரர்கள்தான். உன் படித்த திமிரால்—பணக் கொழுப்பால், உத்தியோகம் செய்யும் மமதையினால்—எங்கள் குழந்தையைப் பார்த்துப் பிச்சைவேண்டுமா என்று கேட்கிறாயே! உனக்கு வந்த கேடுகாலமென்ன? எங்கப் பையன் உன்னிடம் பிச்சை வாங்க வரவில்லை. நீதான் கொடையில் கலியுக கர்ணன் என்று எண்ணி அப்படிக் கேட்கிறாயா? உன் ஜம்பம் எல்லாம் எங்கள் குழந்தையிடம் காட்டவேண்டாம். உன் பணக் கொழுப்பு உன்னோடு இருக்கட்டும்" என்று வாயில் வந்தவாறு திட்டிவிட்டு, அப்பையனை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இந்தச் சம்பவத்தினால் அபாரமான அவமானமும் தாங்கவியலாத தலைக் குனிவும் பி. வாரனுக்கு உண்டாகிவிட்டது. அப்போதே தன் தாய்ப் பாஷையின்மீது அபிமானமின்றிப் பாழும் ஆங்கிலத்தில் மூழ்கித் தத்தளித்ததின் பலன் நன்றாகத் தெரிந்தது.

மனத்திற்குள் வெகுவாய்த் துயருற்றான். தன்னையே நொந்து கொண்டான். தனது ஜன்ம பூமியின் மாத்ரு பாஷையை விட்டு அன்னிய பாஷையைச் சமயமின்றிக் காரணமின்றிப் பேதைகளின் முன்னிலையில் உபயோகித்ததற்குப் பலன் போதும். இந்த அவமானத்துடன் நாம் சீர் பெற்றால் போதும். தமிழ் ஆங்கிலம் உள்ள அகராதி ஒன்று வாங்கி எல்லாவற்றிற்கும் தமிழ்ப்பதம் கற்கவேண்டும். இனி தமிழிலேயே பேசவேண்டும். இந்த ஊருக்கு வந்தது போதும். இதோடு கிளம்பினால்தான் மரியாதையாகச் செல்லலாம். இல்லையேல் இன்னும் வேறு அவமானம் கிட்டிவிடும் என்று தனக்குள் முடிவு கட்டிக்கொண்டான்.

அதே சமயம் சின்னாணி, முன்னர் உள்ளே எடுத்துச் சென்ற கிராமபோன் பிளேட்டை அந்த எழுத்து அழிவதற்காகத் தேய்த்

தாங்கள் எத்தனை தப்பிதம் செய்தாலும், குற்றமாகப் பேசினாலும் அதற்கெல்லாம் தலையாட்டித் தாளம் போடுகிறவர்கள் வெகு நல்லவர்களாம், எல்லாவற்றையும் அறிந்து கொண்டு பதில் பேசாதவர்கள் கள்ளங்

துத் தேய்த்துப் பார்த்தாள். அது அழியவில்லை. ஊற வைத்தாள். செங்கலால் தேய்த்தாள். ஒன்று உடைந்துவிட்டது. பிறகு, அடுப்பில் போட்டால் சரியாகிவிடுமோ என்று எண்ணி மற்றொன்றை அடுப்பின்மேல் வைத்ததுதான் தாமதம். அரக்கினால் செய்த தட்டு அப்படியே உருகிக் குபீரென்று பற்றி எரிய வாரம்பித்தது. அதைக் கண்டு பயந்து போய்விட்டாள். அரக்கு கோரமாக எரிவதால், அடுப்புக்குப் பக்கத்திலிருந்த ஓலையில் பட்டு அதுவும் தீப்பிடித்துக்கொண்டது.

உள்ளே இருந்த சின்னாணி, "குய்யோ, முறையோ!" என்று கூக்குரலிட்டாள். எல்லோரும் ஓடி வந்தார்கள். நமது வாலிபனும் ஓடினான். என்னவென்று விசாரித்ததில், சின்னாணி உரத்த குரலில், "ஐயோ! பட்டினத்துத் தோசைக் கல்லும் போக்கிரி என்பதை அறியாது, நான் மோசம் போய்விட்டேன். அதனால் வீடும் பற்றி எரிந்துவிடும்போலிருக்கிறதே! என்ன செய்வேன்? அம்மாஞ்சீ! நீ வாங்கி வந்த தோசைக் கல்லை உனக்குத் தோசை செய்வதற்கு எடுத்து வந்து அடுப்பில் வைத்தேன். அது இந்தக் கதியாக்கிவிட்டது. ரவா தோசை அழகாக, மெல்லீசாகச் செய்யலாம் என்று எண்ணினேனே! ஐயோ! என்ன செய்வேன்?" என்று கத்தினாள்.

நமது வாலிபனுக்கு, "கிராமபோன் தட்டின் கதிதான் இது" என்று நன்றாக விளங்கிவிட்டது. "சுந்தராம்பாளின் பாட்டின் மீதுள்ள ஆசையால் வாங்கியது நாசமாய்விட்டதே! எனக்குத் தாய்ப் பாஷையின் அபிமானங் குறைந்ததற்குச் சரியானபடி அவமானமும் தண்டனையும் கிடைத்துவிட்டது. இவர்களுக்கோ கல்வியின் வாசனையே இல்லாததின் பலன் கைமேல் கிடைத்துவிட்டது. பாட்டுப் பாடும் பெட்டியை என்றாவது கண்டிருந்தால், இவர்களுக்குத் தெரியும். அன்றி நாமாவது சொல்லி இருக்க

கபடம் நிறைந்த புனையர்களாம்; எதையும் உடைத்துப் பதிலுக்குப் பதில் பேசுகின்றவர்கள் பெருத்த வாயாடிகளாம். மேற்குறித்தவர்களுக்கு யார் தான் நல்லவர்கள்? இதற்கு அவர்களே தனித்துத் தான் சிருஷ்டி செய்ய வேண்டும்போலும்.

வேண்டும். இரண்டு மில்லாததன் கேடு இது. நாம் இவ்விடம் வந்த வேளையே ஏதோ போதாத வேளையாகிவிட்டது. இந்த மட்டும் நாம் விடுதலை பெற்று ஓட்டமெடுத்தால் போதும்" என்று தோன்றிவிட்டது.

உடனே எல்லோரும் தீயை அணைத்தார்கள். தான் அவசரமாகப் போக வேண்டுமென்று கூறிவிட்டு, ஏதோ சொல்ப ஆகாரம் செய்துகொண்டு கிளம்பி, உடை யணிந்த பின்பு டொப்பியை எடுத்துப் பார்க்காமல் அவசரத்தில் தலையில் அணிந்துகொண்டான்.

குழந்தைகள் வீடு கட்டும் விளையாட்டில் சேறு வாரியும், முட்டை தட்டும் விளையாட்டில் சாணி வாரியும் விளையாடினார்களல்லவா? ஆதலால், அவ்விரண்டும் அதில் ஒட்டிக்கொண்டிருந்தமையால், அவன் தலையில் அவை நொள நொளவென்று ஒட்டிக்கொண்டன. கையிலும் பட்டன. உடனே டொப்பியை எடுத்துப் பார்த்தபோது அதில் சாணி, மண் இரண்டு மிருக்கக் கண்டு, முன்பு அடைந்ததைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த அவமானத்தை அடைந்து, இதை வெளியில் காட்டிக்கொள்ள வெட்கித் தேள் கொட்டிய திருடன் போல விழித்தான்.

அதே சமயம் முதலில் டவிலுக்காக அடிபட்ட பெண்ணும், ஹாட்டை வைத்து விளையாடிய குழந்தைகளும் அங்கு வந்தார்கள். "அம்மாஞ்சி! இது சாணிக் கூடையாயிற்றே! இதையா தலையில் மாட்டிக்கொண்டாய்?" என்றனர். அந்தப் பெண் இது கண்டு சந்தோஷமடைந்து, "ஹத்து! உனக்கு வேண்டும்; வேண்டும். என்னை அநியாயமாய் அடித்தாயல்லவா? அதற்குக் கடவுள் உன் தலையில் சாணியும் மண்ணும் போட்டார்" என்று கூறி நகைத்தாள்.

போட்டி என்பதில் எல்லோருக்கும் ஆசை, ஆர்வம். சிறு கோழி விளையாட்டு முதல் பெரிய மெடல் பரிசு பெறும் வரையில் உள்ள சகலத்திலும், சகலருக்கும் தாம் தாம் ஜெயிக்க வேண்டுமென்கிற உணர்ச்சியும் பரபரப்பும் தானுகவே உண்டாய்விடுவதோடு, தோல்வியிலும் அதற்குத் தக்க உணர்ச்சிகள் வந்து விடுகின்றன.

அந்த நகைப்பு அவனுடைய இருதயத்தைப் பிளந்துவிட்டது. "சீச்சீ! இன்று முதல் நான் புதிய மனிதனாக மாறிவிடவேண்டும். நாம் நமது தாய் நாட்டு நாகரிகத்தையும், தாய்ப் பாஷையையும் விலக்கியதின் பயன் போதும்; போதும்; போதும்; போதும். இனி இங்கு நின்றாலும், வாயைத் திறந்தாலும் இன்னும் அவமான மடைவோம். இம்மட்டுடன் போய்ச் சேருவதே உத்தமம். பட்ட அவமானங்கள் போதும். இந்தக் கோலத்தில் நம்மை யாரும் கவனிப்பதற்கு முன்பு ஓட்டமெடுப்போம்" என்று நினைத்துத் தலையைத் துடைத்துக்கொண்டு, "நல்லவர்களுக்கு அடையாளம் சொல்லாது போவது" என்ற மூதுரைப்படி சாமான்களை எடுத்துக் கொண்டு மெல்ல நழுவிவிட்டான். முன்பு குளத்தில் ஒரு பெண் மணியினால் வசை வாங்கியதும் நினைவிற்கு வந்துவிட்டது. இனி தான் எப்படியாவது—ஆங்கிலமும் தமிழும் கலந்த அகராதி ஒன்று வாங்கிப் படித்தாவது—தாய்ப் பாஷையை நன்றாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து அன்று முதல் வேறு மனிதனாக மாறித் தற்போது முற்றும் மாறுதலுடன் இருப்பதோடு, பி. வாரென் என்று குறுக்கிய தன் பெயரை விலக்கிப் பரமேச்வரன் என்ற முழுப் பெயருடன் விளங்குகின்றான்.

அன்பின் சிகரம்

2-ம் பதிப்பு] [விலை அணா 4

பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினு மினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை அறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?......

4

சுட்டு விடுவேன்

"நடேசா! நாளைய பந்து விளையாட்டிற்குக் கட்டாயம் போகவேண்டும். நாளைய மறுதினம் நாம் ஊருக்குச் செல்லலாம் என்ன சொல்கிறாய்?" என்றான் சபேசன். இவ்விருவரும் பீ. ஏ. வகுப்பில் படிக்கும் மாணவர்கள். இருவரும் மிக்க செல்வ முடையவர்கள். இயற்கையிலேயே நல்ல குணம் அமைந்தவர்கள். ஆனால், அதிகச் செலவாளிகள். பணம் செலவிடுவதில் கணக்குப் பார்க்காதவர்கள். இருவரும் ஏகோபித்த மனத்தையுடையவர்கள்.

இவர்கள் படிக்கும் கல்லூரியில் பெண்மணிகளும் படிக்கின்றார்கள். அதில் பீ. ஏ. வகுப்பில் படிக்கும் விஜயா என்னும் பெண்மணி மிக்க ரூபவதி; குணவதி; புத்திசாலியாகையினால் அவள் படிப்பு விஷயத்தில் மிக்க விரைவில் மேன்மை பெற்று வந்தாள்.

நமது இரு வாலிபர்களில் சபேசனும் அந்த நங்கையும் அடிக்கடி சந்தித்துப் பேசுவதும், படிப்பு விஷயமாக வேண்டிய விஷயத்தைக் கேட்டு அறிவதுமான பழக்[illegible]ளவர்க ளானார்கள். நாளடைவில் இருவரின் மனமும் ஒருவரை யொருவர் விரும்பியது; தளிர்விடும் காதலாக மாறியது. அவர்கள் தினந்தோறும்

சில குள்ளநரிகள் தங்கள் சொந்த பணத்தோடு ஓட்டலுக்குச் சென்றால், இரண்டணவுக்குமேல் சாப்பிட மனம் வருவதில்லை. இந்தச் சிக்கனத்தை யறியாதவர்கள், "ஏன் கொஞ்சமாகச் சாப்பிட்டாய்?" என்றால், "வயிற்றில் இடமில்லை; பசி இல்லை" என்கிறார்கள். அதே ஆசாமிகள் பிறர் பணத்தில் சாப்பிடும்போது ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் செல

ஒருவரை யொருவர் சந்தித்துப் பேசாது வீட்டிற்குச் செல்வதில்லை. இருவரும் நேசித்திருப்பது இருவருடைய வீட்டாருக்கும் தெரியவராது. வீட்டில் ஒரு தினமும் சந்திப்பதுமில்லை. அவர்களுடைய ரகசியம் நடேசன் ஒருவனுக்குத்தான் தெரியும்.

நாம் கதையை ஆரம்பிக்கும் காலம் அந்தி நேரமாதலால் கடற்கரையில் இரு வாலிபர்களும் பேசிக் கொண்டிருக்கையில், அங்கு நாம் குறிப்பிட்ட விஜயா வந்தாள். அவள் வரவைக் கண்ட நடேசன் மெல்ல நழுவி விட்டான். காதலர்களிருவரும் பேச வாரம்பித்தார்கள்.

சபேசன் :—விஜயா ! ஏன் இன்று உனக்கு இத்தனை நேரம்? இன்று பிற்பகல் விடுமுறை தினமாகையினுல் வழக்கம்போலச் சீக்கிரம் வருவாய் என்று எண்ணினேனே !

விஜயா :—ஆம்! நானும் அப்படித்தான் சீக்கிரம் வர நினைத்தேன். இன்று எதிர்பாராதபடி ஓர் சினேகிதை வந்தாள். அவளோடு சில இடங்களுக்குச் சென்று வந்தேன் ; அதனுல் தாமதமாகி விட்டது. நான் ஓர் ஜோஸியம் கண்டு பிடித்து விட்டேன். நேற்று என்ன விசேஷம் நடந்தது ; அதை எனக்குக் கூறுங்கள்.

சபேசன் :—(திடுக்கிட்டு) என்ன விஜயா! என்ன புதிதாகத் திடீரென்று கேட்கிருய் ? விசேஷமென்ன ! ஒன்றுமில்லையே ! ஏன் அப்படிக் கேட்கிருய் ?

விஜயா :—இல்லை ! இல்லை ! நீங்கள் இனி பொய் சொல்லி ஒளிப்பதால் பயனில்லை. நான் அதைக் கண்டு பிடித்து விட்டேன். எனினும் உங்கள் வா[illegible]ல் கூறக் கேட்க வேண்டும். அதை ஒளியாது சொ[illegible]ல்லு[illegible]கள். இல்லையேல் நான் விடமாட்டேன்.

சபேசன் :—விஜயா ! நான் உன்னிடத்தில் ஒளிக்கக்கூடிய அதிசயமான விஷயம் எதுவும் நடக்கவில்லை. ஆனுல் நடந்த

விட்டுத் தாராளமாக நாலைந்து ஏப்பம் வரும் வரையில் காத்திருந்து, சாப்பிட்டு வருகிருர்கள். தன் பணமென்ருல் வயிறு இரண்டணுவுக்குள் அடக்கமாம்; பிறர் பொருள் என்ருல் இரண்டு ரூபாய்க்கும் பெருகிவிடுமாம். இதென்ன வயிறு ? மந்திரப் பையா அது ?

6

விஷயத்தைக் கூற முதலில் வெட்கினேன். பின்னர் கூற நினைத்தேன். அதற்குள் அவசரமுற்று நீயாகக் கேட்டு விட்டாய். நேற்று நானும் என் நண்பனும் சினிமாவுக்குச் சென்றோம். சினிமா பார்த்துவிட்டுத் திரும்புகையில், கால் நடையாகவே வந்தோம். வரும் வழியில் நவராத்திரி பண்டிகையின் விநோதம் சௌகார்ப்பேட்டையிலுள்ள சில வீடுகளில் வெகு அழகாயிருந்தது. அங்கு அளவற்ற ஜனங்கள் சென்று பார்த்தார்கள். நாங்களும் கும்பலில் உள்ளே நுழைந்தோம். செருப்புடன் உள்ளே வரக்கூடாது என்று சொன்னார்கள். செருப்பைக் கழற்றி நடையில் விட்டு விட்டு, உள்ளே சென்று வேடிக்கை பார்த்து விட்டுத் திரும்பி வந்து பார்க்கையில், என் செருப்புக்களில் ஒன்று மாறுட்டமாகி வேறு யாருடையதோ அதற்குப் பதிலாக இருந்தது.

உடனே எனக்குத் திடுக்கென்று வாரிப்போட்டது. அந்தச் செருப்பை நான் எவ்வளவு அருமையாக வைத்திருந்தேனென்பது உனக்கே தெரிந்த விஷயம். அது எனது ஆருயிர் நண்பன் நடராஜனால் பரிசாக அளிக்கப்பட்டதல்லவா? மேலும், என்னை அந்தச் செருப்பு பலவித ஆபத்துக்களினின்று காப்பாற்றி இருக்கிறது. என் காலில் தேள், நட்டுவாக்காலி முதலிய விஷ ஜந்துக்கள் கடிக்க விருந்த சமயம் அந்தச் செருப்பே அதைத் தடுத்ததோடு, அவைகளைக் கொன்றது. எங்கள் வீட்டில் திருடவந்த ஓர் கள்ளனை அச்செருப்பாலேயே அடி[illegible]த்துத் துரத்தினேன். இவ்விதம் பல விதங்களில் உதவிய என் செருப்பில் ஒ[illegible]று போய்விட்டதால், அங்குதான் யாருடையதோ மாறுடி [illegible]க்குமென்று எல்லோரையும் விசாரித்தேன். எல்லோருடைய செ[illegible]ப்பைய[illegible]ம் பா[illegible]த்தேன். இதற்கு முன்பே நான் உள்ளே இருக்கையில் போ[illegible]ய்விட்டவர்கள் இடந்தான் அது போய்விட்டதென்றறிந்தேன். எனக்குண்டான துயரத்திற்கு அளவே இல்லை. அங்குள்ள ஒரு காவல்காரனைக்

சில பெரியவர்கள் தம் வீட்டில் காலணாவுக்குக் கீரை வாங்கி அதை அதிகம் ஆய்ந்தால் குறைந்துவிடுமோ என்று வேரும் விறகுமாகக் கறி செய்யச் செய்து, அதிக மதுரமாக இருக்கிறதென்று காலணாக் கீரையில்

கேட்டால் அவன் பிரமாதமாகச் சண்டைக்கு வந்துவிட்டான். செருப்புப் போய்விட்ட விசனத்துடன் நானும் நண்பனும் திரும்பி விட்டோம். ஸென்ட்ரல் ஸ்டேஷனுக் கெதிரிலுள்ள புதிய வாராவதியின்மேல் வருகையில், 'மாருடிய செருப்பு எனக்கு எதற்கு?' என்று வெறுத்து அந்தக் கால்வாயில் இரண்டு செருப்பையும் வீசி எறிந்துவிட்டு வந்துவிட்டேன். அழகான சினிமா பார்த்த நினைவெல்லாம் செருப்பின்மீதே சென்று லயித்து விட்டதால், அந்த எண்ணம் ஒழிவதற்கே அதை விட்டெறிந்து, பின்னர் நிம்மதியாக வீட்டுக்கு வந்து விட்டேன்.

நேரே என்னுடைய அறையில் சென்று சற்றுப் படுத்தேன். தூக்கம் வராததால் எழுந்து சிறிது நேரம் படிக்க எண்ணி, விளக்கேற்றினேன். அதிலும் புத்தி ஓடவில்லை. பிறகு வெளி வராண்டாவில் உலாவினேன். அப்போது நான் வழக்கமாய்ச் செருப்பு வைக்குமிடத்தில் இரண்டு செருப்புக்களிருந்ததைப் பார்த்தேன்.

அதைப் பார்த்த உடனே எனக்குச் சொல்ல வியலாத வியப்பு உண்டாகி விட்டது. அதில் ஒன்று நான் கெட்டு விட்டதாக நினைத்த என்னுடையதே! மற்ருென்று நான் அங்கு மாருடியதாக எண்ணிய செருப்பின் ஜதையாக இருந்தது கண்டு, என் ஆத்திரத்தையும் மூட மதியையும் எண்ணி, நானே வியந்தேன்.

நான், சினிமா போகும் அவசரத்தில், என் நண்பன் கண்ணனின் செருப்பில் ஒன்றைக் கவனியாது மாருட்டமாகப் போட்டுக் கொண்டு வேகமாகச் சென்[illegible] இருக்கிறேன். இங்கு இதைப் பார்த்த பிற[illegible]க, யாரோ மாற்றியதாக அநியாயமாய் எண்ணி எடுத்தவர்க[illegible] திட்டினேன் என்பது தெரிய வந்தது.

செருப்பி[illegible] நினைவு மாறுவதற்கு அதைக் கால்வாயில் வீசி எறிந்தால், இங்கும் அதே ஒற்றை ஜோடு வந்து மீண்டும் அதையே நினைக்கச் செய்து விட்டதே! சற்றுப் பொறுமையை இழக்காது வீட்டிற்குக் கொண்டு வந்திருந்தால், நாம் நம்முடையதையே

பத்துப் பேர் புசிக்கிருர்கள். அதே வீட்டார் பிறர் வீட்டில் வந்தால் கறி முதல் மோர் வகை வரையில் தூஷித்துக் கொண்டே ஒரு ஆனைத் தலையளவு உள்ளே தள்ளி விடுகிருர்கள் பாவம்.

அணியலாகுமே என்று விசனித்து, என் மதியீனத்தை நொந்து கொண்டேன். பிறகு அதே நினைவாக இரவைக் கடத்தினேன்.

இன்று காலையில் நானும் என் நண்பனும், ஒரு வேளை அந்தக் கால்வாயில் செருப்பு இருக்குமோ பார்ப்போம் என்று சென்றோம். அங்கு நான் வீசி எறிந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் கரையோரமாக அதே இரண்டு செருப்புகளும் மிதந்து கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமும், என் அதிர்ஷ்டத்தைக் குறித்து ஆனந்தமும் அடைந்தேன்.

உடனே அதை எடுத்துக் கொண்டு வந்து என் ஜோடியை நான் அணிந்தேன். என் நண்பனுடையதை அவனிடமளித்தேன். விஜயா! இந்த விஷயம் உனக்கு எவ்வாறு தெரிந்தது? இதை உனக்குப் பிறகு ஒரு சிறு கதையாகச் சொல்லி, உன் அபிப்பிராயத்தை அறிய எண்ணினேன். அதற்குள் கேட்டு விட்டாயே! என் மூடத் தன்மையையும், ஆத்திர புத்தியையும் கண்டு பரிகசிக்கின்றாயா? இதை உனக்கு யார் தெரிவித்தது?

விஜயா :—தாங்களே தான் அதைத் தெரிவித்தீர்கள். இன்று காலேஜில் நீங்கள் ஒரு புத்தகம் எனக்குக் கொடுக்கவில்லையா? அதைப் பிரித்தபோது அதில் நீங்கள் இன்று காலையில் எழுதிய சிறு கதை, 'செருப்புக் கதை' இருந்தது.

அதைப் படித்தேன். இது எதற்காக எழுதியது என்று யோசித்தேன். நீங்கள் சிறு கதைகள் அநேகம் எழுதி இருப்பதால், அதில் இதுவும் [illegible] என்று முதலில் நினைத்தேன். பிறகு புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கையில், செருப்புக் கதை படித்த நினைவால், உங்கள் செருப்பைக் கவனி[illegible]ன். [illegible]தில் ஒன்று நன்றாகத் தண்ணீரில் ஊறித் தடித்திருந்தது; மற்[illegible]றன்[illegible] சாதாரணமாக விருந்தது. நேற்று நீங்கள் சினிமாவுக்குச் சென்றதை

மனித சமூகத்திற்கு அந்நியர்களாயினும், கடவுளால் ஒருமனப்பட்டுச் சேர்த்துள்ள காதலர்கள் எப்போதேனும் சந்தித்தக்கால் அவர்களின் களங்கமற்ற ஆனந்தத்திற்கு எல்லையுண்டா? அதை நோக்கும் பிறருக்கும் மனம் குதூகலிக்கின்றதாம். கடவுள் இத்தகையோரை ஏன் சேர்க்காது பிரித்தான் என்று கண்ணீரும் வருகிறதாம்.

நானறிவேனுகையினுல், இந்தச் செருப்புக் கதை உங்களுடையதே என்று நான் துப்பு விளக்கினேன். அது சரியாகி விட்டது.

சபேசன் :—'ஓ! அப்படியா! நீ அதைப் படித்து விட்டாயா!' என்றுன். இன்னும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்த பின்னர், அவர்கள் பிரிந்தார்கள்.

* * * *

மறுதினம் பந்தாட்டத்திற்குச் சபேசன், நடேசன் இருவரும் சென்றுர்கள். எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் கூட்டம் நிரம்பி விட்டது. இரு தரத்தினரும் வெகு உற்சாகத்துடன் மும்முரமாக ஆடினுர்கள். ஜனங்கள் ஆனந்தமாய்ப் பார்த்துப் பின்னர் ஆட்டம் முடிந்ததும், தத்தம் வீட்டுக்குக் கிளம்பினுர்கள்.

நமது வாலிபர்கள் சௌக்கார்ப்பேட்டைப் பக்கம் போக வேண்டி யிருந்ததால், தமாஷாகக் கால் நடையாகவே செல்வதென்று புறப்பட்டார்கள்.

வாலிபர்களிருவரும் மெல்ல தமாஷாகப் பேசிக்கொண்டும், நகைத்துக்கொண்டும் பீபிள்ஸ் பார்க் வடவண்டைப் பக்கமாகச் செல்கையில், தங்களைப் பின்பற்றி ஓர் ஆள் வருவதை யறிந்தார்கள். எனினும் அவனும் தங்களைப் போன்ற வழிப்போக்கன் என்று எண்ணி, அவர்கள் மேலும் நடக்கலானுர்கள். அநேக வழிகளில் அநேகர் சென்றுவிட்டபடியால், இவர்கள் செல்லும் பாதையில் ஜன நடமாட்டமே இல்லை.

பின்தொடர்ந்த ஆசாமி இவ[illegible] சமீபத்தில் வந்ததும் இவர்கள் எதிர்பாராத [illegible]தமாக எதிர்மல[illegible]த்து நின்று அப்படியே "நில்லுங்கள்[illegible]" என்[illegible]றியவாறு, கைத்துப்பாக்கியைக் காட்டி, "சுட்டு[illegible]விடுவே[illegible]ன். [illegible]யைத் திறக்காதீர்கள். உங்களிடமுள்ள பொருள்களை [illegible]ப்படி வைக்கிறீர்களா? இந்தத் துப்பாக்கிக்கு இரை

நாம் ஒருவரை உயிருக்கு உயிராக மதித்து வருகிறேம். அவர்களும் அப்படியே. அவர்கள் ஆயுளில் நம்மிடம் கூருத விஷயமில்லை எனினும் எந்தவிதமான எண்ணத்தாலோ ஏதோ ஒன்றைக் கூருது சில நாள் மறைத்த பின்னர் விஷயம் வெளியானதும், "ஐயோ! முன்பே கூருது போனேமே" என்று எண்ணி வருத்தமடைகிறுர்கள்.

யாகின்றீர்களா? உம். என்ன யோசனை! கொடுங்கள்" என்று அதட்டி அவர்களது முகத்திற்கு நேரே துப்பாக்கியை நீட்டினான்.

அந்தோ! அவ்வாலிபர்களின் உள்ளம் எவ்வாறுதானிருக்கும்! குலை நடுக்கலுற்றது. தங்களைப்போன்று வழிப்போக்கன் அவன் என்று எண்ணியதற்கு மாறாக, அவன் ஓர் கள்ளனாக விருந்ததை எண்ணி, நடு நடுங்கிவிட்டார்கள். அச்சமயம் உயிர்த் தப்பினால் போதும் என்று எண்ணி, வாயைத் திறவாமல் தங்களிடம் இருந்த பணம், காதுக் கடுக்கன், மோதிரம், தங்கச் சங்கிலி, கடியாரம், தங்க உறையிட்ட பவுண்டன் பேனா முதலிய சகலத்தையும் எடுத்துக் கொடுத்துவிட்டார்கள். அந்தோ! எமனிடம் உயிரை ஒப்பு விப்பதுபோல அந்தக் காதகனிடம் விலையுயர்ந்த பொருள்களைக் கொடுக்கையில் அவர்களின் மனம் எவ்விதம் தத்தளித்திருக்கும்?

இவைகளைப் பெற்றுக்கொண்ட மனிதன், "உம்! வாய் திறவாது செல்லுங்கள். நின்றால் சுட்டுவிடுவேன்" என்று விரட்டினான். அவர்கள் "செத்தேன்; பிழைத்தேன்" என்று ஓட்டமெடுத்தார்கள்.

"வீட்டிற்குச் சென்றால் என்ன சொல்வது? 'காதில் கடுக்கன் எங்கே?' என்று முதலில் அம்மா கேட்பாளே! ஐயோ! விதியே! ஆடம்பர அலங்காரம் வேண்டாம். இது எதற்கு என்று விஜயா பலதரம் கூறியும் நாம் அந்த ஆசையை ஒழிக்காது மோசம் போய்விட்டோமே!" எ[illegible] எண்ணாததும் எண்ணி, அவர்கள் மனந் தவித்தார்கள்.

"எந்த விஷயத்தி[illegible] உண்மையைக் [illegible]றுவதற்குச் சமானம் வேறெதுவுமில்லை. எப்படித்தான் பொ[illegible]ரைத்[illegible]லும் இந்த விஷயத்தை யொளிக்கமுடியாது. ஆலயயில[illegible] ந[illegible]ந்ததை வீட்டில் சொல்லிவிடுவது மேலானது" என்று இ[illegible]வரும தீர்மானித்துக் கொண்டார்கள்.

பிறர் பேசிக் கொண்டே இருக்கையில் வெகு கவனமாய்க் கேட்பது போலக் கேட்டுக் கொண்டே சிலர் கர்ர்ர் என்று குறட்டை விட்டுப் பயங்கரத்தை யுண்டாக்கி விடுகிறார்கள். இதைக் கவனியாது ஓயாது பேசியவர்களுக்குத் தொண்டை வலிதான் மிஞ்சுகின்றது.

வீட்டிற்கு வந்ததும் தம் தம் பெற்றோரிடத்தில் அவர்கள் உண்மையைக் கூறிவிட்டார்கள். பெரியோர்கள் பிள்ளைகளின் உயிர் பிழைத்ததற்கே உண்மையில் சந்தோஷித்தார்கள்.

செருப்பு மாறியதற்கே மனம் தவித்த சபேசனின் கதி இப்போது கேட்கவேண்டுமா! இதே ஏக்கம் பிடித்துவிட்டது. ஊருக்குப் போக எண்ணியிருந்ததையும் வெறுத்தான். துக்கமும் வயிற்றெரிச்சலும் பாதிக்க, வீட்டோடு நின்று விட்டான். விஜயாளைக் காண்பதற்கும் வெட்கினான்.

மறு நாளைய பத்திரிகையில், கீழ்க் கண்டவாறு பெரிய எழுத்துக்களில் விளம்பரமொன்று செய்திருந்ததைச் சபேசன் கண்டான். அதை ஆவலோடு படிக்கலானான்.

கண்டெடுக்கப்பட்டன

சுமார் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு ஜோடிக் கடுக்கன்கள், 1,500 ரூபாய் மதிப்புள்ள 4 மோதிரங்கள், 100 ரூபாய் பெறுமானமுள்ள இரண்டு தங்கச் சங்கிலியுள்பட கடியாரங்கள், தங்க உறையிட்ட பவுண்டன் பேனாக்கள் சில நோட்டுக்கள்......இவைகளின் சொந்தக்காரர்கள் தக்க அடையாளங்கள் கூறி, கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்து பெற்[...]ள்ளலாம்.

"[...]ங்களபவனம்"

என்று பெயரில்லா[...] விலாசம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைப் பார்த்த இருவருக்கும் உண்டான சந்தோஷத்தி[...] எல்லை[...] இல்லை. "மங்கள பவனம்" எங்கிருக்கிறதெ[...] [...] கே[...]டு அன்று இரவே போவதென்று நி[...] இருவருக்கும் ஓர் சந்தேகம் பிறந்துவிட்டத[...]

[...]மாமியார் வீடு செல்ல மருமகள் அழுததாகக் [...]
[...]ள் தாம் படிக்கும் ஹாஸ்டலிலிருந்[...]
[...]க் கண்ணீர் விடுகிறார்களாம்.

சபேசன் :—நண்பா! திடீரென்று எனக்கு ஓர் சந்தேகம் உதிக்கின்றது. அதாவது இதைக் களவாடிய திருடன் நம்மை யழைத்து, அவைகளைக் கொடுப்பதென்றது சாமானியமாய் நினைக்கத் தக்கதா? போலீஸார் தகவல் அறிந்ததாகவும் இதில் தெரிய வில்லை. ஒருகால் இந்த மாதிரியான விளம்பரம் செய்து, நம்மை நல்லதனமாகவே வரவழைத்துப் பின்னும் பணம் பறிக்க உத்தேசித்திருப்பானே! நாம் அங்கு சென்ற பிறகு நம்மை அவன் மிரட்டி, உருட்டி "இன்னும் 10,000 ரூபாய்க் கொடுத்தால்தான் உங்களை விடுவேன்; இல்லையேல் சுட்டு விடுவேன்" என்று கூறி, நம் கைப்படவே கடிதம் கொடுக்கச் செய்து, நம் வீட்டில் வந்து இம்சை செய்வானே! இதில் எனக்கு முன்பு இருந்த சந்தோஷம் மாறி, பெரிய குழப்பம் வந்து விட்டது. அதோடு நாம் படிக்கும் ஆங்கில நாவல்களெல்லாம் என் நினைவிற்கு வருகின்றன. ஆதலால், நாம் முன்னெச்சரிக்கையின்றி, இதில் தலையிட மனம் வரவில்லை. நீ என்ன சொல்கிறாய்?

நடேசன் :—நண்பா! நீ இத்தனை விவரமாய்க் கூறிய பிறகே எனக்கும் பயமாக விருக்கிறது. நமக்கு ஏராளமாகச் செல்வ மிருப்பதும், நாம் நமது பெற்றோருக்கு ஒரே மகன் என்பதுவும் அந்தக் கள்ளன் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். நமது பெற்றோர் பணத்தைப் பார்க்காது நம்மையேதான் பிரதானமாய் நினைத்துப் பணத்தைக் [...]டி விடுவார்கள் என்று அவன் நன்றாகத் தெரிந்து கொ[...]டி[...]கிறான். ஆதலால், நாம் ஏமாறுதல் கூடாது. எனக்கு என்ன [...]தோன்றுகின்றதென்றால், நமக்குத் தெரிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமசாமியிடம் இந்தக் தகவல் [...]லைக் கூறி, அவரை நம்முடன் அழைத்துச் செல்வோம். துப் [...]கியுடன் சில ஆட்களை வீதியில் நிறுத்தச் செய்து, அவரையும் [...] துப்பாக்கியுடன் உள்ளே வ[...]ச்செய்[...] பிற[...] [...]லை. அங்ஙனம் செய்யாவிடின் நா[...]பே[...] [...]ழல்வோம்.

[...]தீபாவளி யன்று விடியற்காலையில் எத்[...]ன
[...] எத்தனை காசு கரியாயிற்று!'' என்று கூ[...]
[...]ஸ் வெடித்த நினைவு நம்மையே இடித்துக் கா[...]

சபேசன் :—இது மிகவும் நல்ல யோசனையே! நாம் நமது தந்தைக்கு இவ் விவரத்தைக் கூறி, அவர்களையும் அழைத்துச் சென்றால் என்ன? இன்னும் நன்மை யல்லவா?

நடேசன் :—ஓ! அங்ஙனமே செய்யலாம். இன்று இரவுக்குள் இந்த ஏற்பாட்டைச் செய்து கொள்வோம்.

பிறகு அவர்கள் தம் தம் பிதாவிடம் தெரிவித்து, முன்பு கூறியதுபோலப் போலீஸ் ஏற்பாடுகள் முற்றும் செய்து விட்டார்கள். மறு தினம் காலை 8 மணிக்கு, எல்லோரும் மோட்டாரில் ஏறி, பத்திரிகையில் கொடுத்திருந்த விலாசத்தை யடைந்தார்கள். அந்த விலாசமுள்ள இடம் ஓர் பெரிய பங்களாவாகக் காணப்பட்டது. அதைக் கண்டதும் போலீஸ் இன்ஸ்பெக்டரின் முகம் சடக்கென்று மாறியது.

பிறகு எல்லோரும் உள்ளே சென்றார்கள். முன் பக்கத்து ஹாலில் விலையுயர்ந்த வேலைப்பாடுகளுடன் கூடிய அலங்காரங்களும் ஆசனங்களும் கண்களைக் கவரத் தக்கதாக விருந்தது கண்டு, எல்லோருமே பிரமித்தார்கள். அங்கு ஓர் ஆசாமி சாதாரண உடை யணிந்து ஆடம்பரமின்றி உட்கார்ந்திருந்தார். இவர்களைக் கண்டதும் அந்த மனிதர் கொல்லென்று விடாது 5 நிமிடம் நகைத்துவிட்டுப் பின்னர், "வாருங்கள்! வாருங்கள்! என்னைக் கைதியாக்கும் நோக்கத்துடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமசாமி நாயுடுவுடன் வந்துவிட்டீர்களா? பலே! இப்படியல்லவா இருக்க வேண்டும்?" என்றார்.

இந்த மொழியைக் கேட்ட எல்லோரும் வியப்புற்றார்கள். ராமசாமி நாயுடுவும் நகைத்துக் கொண்டே அவரது கையை குலுக்கினார்.

சிறு பிள்ளைகளின் விஷமத்தை நாம் கண்டிக்கையில் ஒரு பெரிய பாட்டி, "ஏன் நீ குழந்தைப் பருவத்தில் இதைவிட அதிக விஷமம் செய்வாய். 'அகப்பட்டதை எல்லாம் கிணற்றில் போடுவாய்! உன்னைவிட உன் மகன் எவ்வளவோ தேவலை" என்கிறாள். இவ்வார்த்தை, அந்தப் பையனுக்குப் பலத்த தைரியத்தை யளித்து விடுகின்றது.

ராமசாமி :—"நண்பர்காள்! இந்த மனிதரைப்பற்றி நான் அதிகம் ஏதும் அறியமாட்டேன். எனினும் இவர் ஓர் நியாய வாதி. இவர் எங்கள் போலீஸ் கோர்ட்டிற்குப் பலதரம் கேஸ் விஷயமாக வந்திருப்பதனால், இவரை நான் அந்தச் சமயம் அறிவேன். இவருடைய பெயர் "சீதாகாந்தம்" இவருடைய பங்களாவின் பெயர்தான் "மங்கள பவனம்." அது இந்த விடத்தில் உள்ளது என்பதை நான் நேரில் பார்த்ததில்லை. இவருக்கு இவ்வூரில் பல பங்களாக்கள் இருக்கின்றன. அவற்றில் இதுவும் ஒன்று. நான் இந்தப் பங்களாவில் ஏறும்போதே இவருடைய புகைப் படத்தை முதலில் கண்டேன். நான் அப்போதே திடுக் கிட்டேன். எதற்கும் உள்ளே சென்று பார்ப்போம்" என்று பேசாது வந்தேன்—என்றார்.

இதைக் கேட்ட இரு வாலிபர்களுக்கும் ஒன்றுமே தோன்ற வில்லை. வியப்பே வடிவாய் அமர்ந்து விட்டார்கள். அவர் களுடைய தந்தையரும் பிரமித்துப்போய் விட்டார்கள். சீதா காந்தம் ஓர் பெரிய வக்கீல் என்பது மட்டும் அவர்களுக்குத் தெரியுமேயன்றி, நேரில் அவரைப் பார்த்ததில்லை யாதலால், அவ ருடைய வீட்டு விலாசமிட்டு அந்த விளம்பரம் ஏன் வந்தது என்று விஷயமே புரியாது குழம்பினார்கள்.

சீதாகாந்தம் :—நண்பர்களே குழம்பித் தவிக்க வேண்டாம். நான் சகலமும் விளக்கிக் கூறுகிறேன். வாலிபர்களே! என்னைக் கைதியாக்கும் நோக்கத்துடன் முன்னெச்சரிக்கையாக வந்த உங்களது அறிவைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்; உங்களை மெச்சுகிறேன்; இந்த முன்யோசனையும் ஜாக்கிரதையும் அன்று அந்த மைதானத்தில் பந்து விளையாட்டைப் பார்க்கையில் இல்லாது போயிற்றே!

நீங்கள் வேடிக்கை பார்க்க வரும் இடத்தில் உங்களுக்குச் செலவுக்குப் போதுமான சில்லரை இல்லாது, அளவுக்கு மிஞ்சிக்

சிறைச்சாலையை விட்டு வெளிவந்த பிறகு நம் வீட்டிலிருந்தபடியே சிறைச்சாலையிலிருந்த நினைவை எண்ணிப் பார்க்கின், அப்போதும் சிறைச் சாலையிலிருப்பது போலவே தோற்றுகின்றது. பிறகு சுற்று முற்றும்